அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ✿ மார்கழி (டிசம்பர் – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் கமலமுனிவர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 06.03.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை குருபக்தியே கோடி நன்மை** ........ 16
5. குருநாதர் அருளிய ஞானக்கவிகள் ........ 43
6. மகான் சுப்பிரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசிநூல் ........ 44
7. மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசிநூல் ........ 46
8. மார்கழி மாத பௌர்ணமி விழா ........ 51
9. தைப்பூச விழா மற்றும் பௌர்ணமி விழா ........ 51
10. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 53
11. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 61

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!

வாயில்லா ஜீவன்களை வதைத்தே உண்பவர்
தாயில்லா குழந்தை போல் தவிக்க நேருமே.

– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

அருளும் அரங்கன் மொழிகளை
அறமாக வரமாக ஏற்று
உறுதிகொண்டு பின்பற்றியே
உருசெபம் ஞானிகள் பேரில் செய்து
செய்துமே சிறப்புதரும் அரங்கன்
சித்திமிகு முழுமதி பூசை கலந்து
அய்யமற வேண்டுதல் வைத்து
ஆபத்து கண்டமிடரின்றி காப்பாயென
எனவேண்டி சங்கல்பமாக
ஏழாம்படை வீட்டில் செய்து
ஞானதேசிகனிடம் சரணடைவு காண
ஞாலமதில் அனைவருக்கும் பாதுகாப்பு

– மகான் கமலமுனிவர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

## பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60
ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70
ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திரிகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகைத் தேவர் திருவடிகள் போற்றி 80
ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | விசுவாமித்திரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வியாக்ரமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வியாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | விளையாட்டுச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வேதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | 131 |

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# உலக நன்மைக்காக அவதரித்தவர் முருகப்பெருமான்
# சார்வரி வருடம் மார்கழி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் கமலமுனிவர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. கலிகாலம் ஞானஆட்சி காலமாக
கந்தனாக அவதரித்த ஞானியே
அழியாமை எனும் ஞானமதை
அறமாக அருளும் தவசியே

2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் வரமாக வருகின்ற
அவணியில் ஞானத்திருவடி நூலுக்கு
அறிவிப்பேன் சார்வரி சாப திங்களுக்கான

3. ஆனதொரு ஆசிபலன் தன்னை
அருளுவேன் கமலமுனிவர் யானும்
ஞானமாக மக்களை காத்திட
நல்ல சக்தியாக வந்து அருளும்

4. அருளும் ஞானத்திருவடி நூலை
அகிலத்தார் பெற்று இனிதே
அருளாக நித்தம் வாசித்து வர
அனைவருக்கும் ஞானபலம் கூடி

5. கூடியே நல்லறிவு தெளிவு பெருகி
குருமார்களால் அடையும் சூட்சுமம்
கூடிடும் சக்திநிலை உணர்ந்து
குவலயத்தார் ஏற்றம் பெறுவர்

6. ஏற்றம் தரவே மக்களை நோக்கி
ஏழாம்படைவீடு படைத்து அருளும்
ஆற்றல் மிக்க அரங்கன் காட்டும்
அற்புதமான சன்மார்க்க வழிகளை

7. வழிகளை உலகமக்கள் ஏற்று
வணங்கி வருகவே மக்களுக்கு
அழியாமை எனும் சக்திகூடும்
அகிலமதில் ஞானிகளை அறியும் உணரும்

8. உணரும் பக்குவம் பணிவும்
உயர்வும் கண்டு சிறப்பர்
ஞானமாக மக்களை நோக்கி
நாளும் உபதேசமாக அருளும்

9. அருளும் அரங்கன் மொழிகளை
அறமாக வரமாக ஏற்று
உறுதிகொண்டு பின்பற்றியே
உருசெபம் ஞானிகள் பேரில் செய்து

10. செய்துமே சிறப்புதரும் அரங்கன்
சித்திமிகு முழுமதி பூசை கலந்து
அய்யமற வேண்டுதல் வைத்து
ஆபத்து கண்டமிடரின்றி காப்பாயென

11. எனவேண்டி சங்கல்பமாக
ஏழாம்படை வீட்டில் செய்து
ஞானதேசிகனிடம் சரணடைவு காண
ஞாலமதில் அனைவருக்கும் பாதுகாப்பு

12. பாதுகாப்பு பெருகி எங்கும்
பேரிடர் துன்பம் விலகி
ஆதரவாய் ஞானிகள் ஆசிபட
அகிலமே அமைதி வளம் காணும்

13. காணவே தயவுநெறி காட்டும்
கனகவேலான அரங்கன் குடில்
ஞானசபையாக நிரம்பியிருக்க
நம்பிக்கை வைத்த மக்களுக்கு

14. மக்களுக்கு மனத்துன்பம் விலகும்
மரணமும் விலகி நிற்கும்
ஆக்கமுற மறுமையும் ஒழியும்
அழியாமை எனும் சக்தி இலகுவாய் கிட்டும்

15. கிட்டவே கேட்டது கிடைக்கும்
குறைவிலா சக்திமிகு மார்க்கத்தை
தட்டாது ஏற்று வருகவே
தவராசன் உயர் வழிகளான

16. ஆனதொரு அன்னதான சேவையை
அனைவரும் ஏற்றுப் பணிந்து
ஞானமாக அகிலம் எங்கிலும்
நாட்டிட உலகோர் செய்துவர

17. வருகவே புண்ணிய பலமும்
வறுமை ஒழிக்கும் சக்தியாகப் பரவி
தருமம் மிக்க ஞானபூமியாக
தரணியும் சிறந்து ஓங்கும்

18. ஓங்காரன் உயர்வாய் காட்டும்
ஓங்கார குடிலின் தொடர்பை
ஓங்காரமாக எண்ணி தொடர
ஓங்காரனின் ஆசிபெற்று வர

19. வருக ஞானயுக மாற்றம்
வல்லமைபட நடந்தேறி
முருகப்பெருமான் ஞானஆட்சி
முழுமைபட கனிந்து வெற்றி தரும் ஞானத்திருவடி நூலுக்கு ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு மார்கழி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் கமலமுனிவர் அருளிய ஆசி நூலின் சாரம் :

எல்லையற்ற துன்பங்களை மக்களுக்கு தருகின்ற கலிகாலத்தினை மாற்றி அதில் ஞானஆட்சி காலத்தினை முருகப்பெருமான் தலைமையில் உருவாக்கி கலியுகத்தை ஞானஆட்சி காலமாக ஆக்கிடவே முருகப்பெருமானின் அவதாரமாக அவதரித்திட்ட மகா ஞானியே, அரங்கமகானே, அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை அடைகின்ற ஞானத்தினை அறமாக மக்களுக்கு அருளி, மக்களை தர்மபலம் கொண்டு காக்கின்ற மகாதவசியே, ஆறுமுக அரங்கமகா தேசிகரே, தாம் அருளுகின்ற வரமாக ஞானம் தாங்கி வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு சார்வரி வருடம் மார்கழி மாதத்திற்கு உண்டான ஆசிதனை கமலமுனிவர் யானும் மக்களுக்கு அருளுகின்றேன்.

அரங்க மகானின் ஞானோபதேசங்களை தாங்கி, ஞானமாக மக்களுக்கு அருளுகின்ற ஞானத்திருவடி நூலினை உலக மக்களெல்லாம் வாங்கி அருள் பெறும் நோக்கில் வணங்கி படித்து வர, படிக்கின்ற அனைத்து மக்களுக்கும் ஞானபலம் பெருகி நல்லறிவு உண்டாகி மனத்தெளிவும் உண்டாகி குருவின்

அருளைப் பெற்று குருவினை அடைந்து தெளிவுறும் சூட்சுமங்களை உணர்ந்து சூட்சும சக்தி பெருகி உலகினில் நல்ல முன்னேற்றமான வாழ்வினை வாழ்வார்கள்.

உலக மக்களை முன்னேற்றி அவர்களை கடைத்தேற்றிடவே உலக மக்களுக்காக ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலினை படைத்து, உலக மக்களுக்கு அரங்க மகான் காட்டுகின்ற அற்புதமான சன்மார்க்க நெறிகளை தர்மத்தின் வழிமுறைகளை உலக மக்களெல்லாம் ஏற்று வணங்கி வரவர, மக்களுக்கு அழிவிலாமையை அடைகின்ற சக்தி பெருகிடும். இவ்வுலகினில் உள்ள ஞானிகளை அறிந்து உணருகின்ற பக்குவமும் பணிவும் பெற்று வாழ்வில் உயர்ந்த நிலையினை அடைவார்கள்.

உலக மக்களுக்கு அரங்கன் உபதேசமாக அருளுகின்ற உபதேச மொழிகளை அரங்கரின் மொழிகளை உலகோர் அறமாக தாங்கள் பெற்ற வரமாக எண்ணி ஏற்றுக் கொண்டு, உறுதியுடன் பின்பற்றி வருவதுடன் தினம்தினம் மறவாமல் ஞானிகள் திருவடிகளைப் பற்றி, மனம் உருகி பூஜைகளை செய்து வருவதுடன் அரங்கர் உலக நலன் கருதி பிரதி மாதந்தோறும் நடத்தும் பௌர்ணமி சித்தர்கள் பூஜையிலே கலந்து ஞானிகளை பூஜித்து, ஞானிகளின் திருவடி பற்றி வேண்டுதல் வைத்து, “அகத்தீசா ஆபத்துகளும், கண்டங்களும் இடர்களும் வாராமல் எம்மை காப்பாயென” என வேண்டி உறுதியெடுத்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை தரிசனம் செய்து, அண்ணல் அரங்கரின் திருவடிகளிலே சரணடைந்து ஆசி பெற, ஆசி பெறும் அனைவருக்கும் ஞானிகளின் அருள் பாதுகாப்பு பெருகிடும். உலகோர் ஞானிகளை வணங்க வணங்க உலகமெங்கும் அருள்பலம் பெருகி, உலகமெலாம் பேரிடர் துன்பம் விலகி, ஞானிகளின் அருளாசியினால் உலகமெங்கும் அமைதி உண்டாகி இயற்கை வளமும் பெற்றிடும்.

உலகினில் தயவு நெறியினை போதித்து வழிநடத்தும் முருகப்பெருமானின் ஏழாம்படைவீடான அரங்க மகானின் ஓங்காரக்குடில், ஞானசபையாக ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றதால், எவரொருவர் அரங்கரின் ஓங்காரக்குடில் மீது முழு நம்பிக்கை வைத்து பின் தொடர்கிறார்களோ, அவர்களுக்கு மனத்துன்பம் விலகும், மரணபயம் அவர்களை விட்டு விலகும், மறு பிறப்பையும் அவர்கள் வெல்லும் வாய்ப்பை பெறுவார்கள், மரணமிலாப் பெருவாழ்வும் கைகூடும், கேட்டதெல்லாம் கிடைக்கும்.

எல்லா நலங்களையும் தந்தருளும் குறையற்ற தூய மார்க்கமான சன்மார்க்கத்தை உலகோர் தட்டாமல் மதித்து ஏற்று கடைப்பிடித்து வர, அரங்கர் கூறும் அன்னதான சேவையை அனைவரும் செய்து வருவதுடன், உலகமெங்கும் அன்னதானத்தை மக்கள் அதிகமாக செய்து வரவர, புண்ணிய பலம் பெருகி

இவ்வுலகில் வறுமையை ஒழிக்கும் மகா சக்தியாக மாறி, இவ்வுலகம் தருமம் மிகுந்த தரும பூமியாக ஞானம் பெற்ற மக்கள் நிறைந்த ஞானபூமியாக மாறிடும்.

ஞானத்தலைவன் முருகப்பெருமானே உயர்வாய் காட்டும் ஏழாம்படைவீடு துறையூர் ஓங்காரக் குடிலின் தொடர்பினை முருகப்பெருமானிடத்து கொண்ட தொடர்பாக எண்ணி தொடர்ந்து வந்து அரங்கனாய் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் ஆசிகளை பெற்று வர, இந்த ஞானயுக மாற்றம் உலகினில் அதீத சக்தியுடன் நடந்து முருகப்பெருமானின் ஞானஆட்சி உலகமெலாம் கனிந்து வெற்றி உண்டாகும் எனக் கூறுகிறார் மகான் கமலமுனிவர்.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**
**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**

என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.

- மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

# முருகன் திருவடி வாழ்க

முருகப்பெருமான் துணை

கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்வது புண்ணியம்தான். ஆனால் அதைவிட கோடி நன்மை ஏழை எளியவர்களுக்கு பசியாற்றுவிப்பது, பசியாறும்போது ஏழைகளின் ஆன்மா மகிழ்ச்சியடையும். அந்த மகிழ்ச்சியே நமக்கு ஞானமாகவும் அறிவாகவும் மாறும். நாம் முன் செய்த பாவத்தையும் நீக்கி புண்ணியத்தையும் பெருக்கும். சித்தர்குலத்தில் நம்மையும் சேர்ப்பார்கள். மரணமில்லாப் பெருவாழ்வும் கைகூடும்.

இந்த வாய்ப்பு உயிர்க்கொலை செய்யும் மக்களுக்கு இல்லை என்பது நாங்கள் அறிந்த உண்மை.

- ஓங்காரக்குடிலாசான்.

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
06.03.1988 அன்று அருளிய அருளுரை

# குரு பக்தியே கோடி நன்மை

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அநேக உயிர்கள் இவ்வுலகில் தோன்றி மடிகின்றன. அதில் ஆறாவது அறிவுள்ள மனிதனிடம் மட்டுமே கடவுளை அறிந்து அடையக் கூடிய ஆற்றல் இருக்கிறது. மனிதவர்க்கம் தோன்றியதன் நோக்கமே கடவுளை அடைவதற்குதான்.

உயிர்கள் தோன்றுவதற்கு காரணம் இயற்கை. இதை துல்லியமாக ஆராய்ந்த போதும், அந்த இயற்கைக்கு காரணம் என்ன என்பதை இதுவரை யாராலும் சொல்ல முடியவில்லை.

ஜீவராசிகள் மற்றும் மனிதவர்க்கம் தோன்றுவதற்கு காரணம் இயற்கை. அரும்பெரும் சக்தி கொண்ட இயற்கையால் எல்லா உயிர்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதை துல்லியமாக சொல்ல முடியும். ஆனால் அந்த இயற்கையைப் பற்றி துல்லியமாக சொல்ல முடியவில்லை. அது அவ்வளவு சிக்கல் நிறைந்த ஒன்று.

எந்த இயற்கை தன்னைத் தோற்றுவித்ததோ, எந்த இயற்கையால் தான் தோன்றினானோ, அந்த இயற்கையைக் கொண்டே, அந்த அரும்பெரும் சக்தியை பெறுகிறான். அந்த அரும்பெரும் சக்தியை கொண்டுதான், இயற்கையை துல்லியமாக ஆராய்ந்து முழுமையாக அறிய முடியும். அந்த சக்தியைக் கொண்டு அவன் அளவிலாத அரும்பெரும் காரியங்களை செய்கிறான். மற்றவர்கள் வெல்ல முடியாத ஒன்றை வெல்கிறான். மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களை செய்கிறான்.

மற்றவர்களால் சிந்திக்க முடியாத, அணுக முடியாத, தொட்டுப் பார்க்க முடியாத, ஆராய முடியாத ஒன்றை, சாதிக்க முடியாத காரியத்தை சாதிக்கின்ற மக்கள் பெருமைக்குரியவர்கள். மற்றவர்களால் ஆராய முடியாத ஒன்றை, இந்த தன்மையாகத்தான் இருக்க வேண்டுமென்பதை ஆராய்ந்து, அதை தன்வயப்படுத்திய மக்கள்தான் பெருமைக்குரிய மக்கள்.

**செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

**– திருக்குறள் – நீத்தார் பெருமை – குறள் எண் 26.**

மற்றவர்களால் சாதிக்க முடியாத, சிந்தித்துப் பார்க்க முடியாத, செய்ய முடியாத ஒன்றை யார் செய்கிறார்களோ, அவர்கள்தான் பெரிய மனிதன். மற்றவர்கள் பார்த்து ஆச்சரியப்படக்கூடிய காரியத்தை யார் செய்கிறார்களோ, அவர்கள்தான் பெரியவர்கள் என்று மகான் திருவள்ளுவர் சொல்கிறார்.

அறுபது வயது நிரம்பிய ஒருவர் சாதிக்க முடியாத ஒன்றை, இருபது வயது நிரம்பியவன் சாதிக்கிறான் என்றால் அவன் பெருமைக்குரியவன், அவன்தான் பெரியவன். இங்கே வயதைப் பற்றிய பேச்சே இல்லை. மகான் திருவள்ளுவர் செயலைத்தான் மையமாகக் கொண்டாரே தவிர, வயதை அல்ல.

**செயற்கரிய செய்வார் பெரியர்** – மற்றவர்களால் சாதிக்க முடியாத பெருமைக்குரிய காரியத்தை சாதிப்பவர்களே பெரியவர்கள். யாராலும் செய்ய முடியாது என்று சொல்லுகின்ற காரியத்தை செய்கின்றவர்கள் அனைவரும் பெரியவர்களே. அதனை செய்ய முடியாத அனைவரும் சிறியர்களே.

மற்றவர்கள் செய்ய முடியாத ஒன்றை ஞானியர்கள் செய்வார்கள். பிறவித் துன்பத்தை மற்றவர்களால் ஒழிக்க முடியாது. ஆனால் ஞானிகள் அதை ஒழித்து விடுவார்கள். மரணமிலாப் பெருவாழ்வு என்பது சின்ன விஷயமல்ல. ஞானிகள் அரும்பெரும் ஆற்றல் கொண்டவர்கள்.

ஞானிகள் மரணமிலாப் பெருவாழ்வை பெற்றவர்கள். அதை முழுமையாக கற்றவர்கள், அந்த ஆற்றலை கைவரப்பெற்றவர்கள். நம்மால் முடியாத ஒன்றை ஞானிகள் சாதித்திருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய பெருமைகளை நாம் பேச வேண்டும்.

இயற்கையைப் பற்றி, இயற்கையால் தோற்றுவிக்கப்பட்ட மனிதன் மற்றும் மற்ற ஜீவராசிகளைப் பற்றி சொன்னோம். எந்த இயற்கையால் அவன் தோற்றுவிக்கப்பட்டானோ, அந்த இயற்கை அவனுக்கு வசப்பட்டால் என்னென்ன காரியங்களை சாதிக்கிறான் என்பதை பார்ப்போம்.

**ஆமப்பா புலிகரடி சிங்கமதம் பொங்கும்**
**யானையின் மேலேறி நடத்துவது லெகுவாகும்**
**ஓமப்பா பெரியரவைப் பிடித்து வாட்டி**
**யோரிடத்தி லடைக்கலமா யெந்தநாளும்**
**சோமப்பா லுண்டினமை யாயிருக்கலாம்பின்**
**சொர்ணமது செய்யலாஞ் செம்பைத்தானும்**
**ஆமப்பா குளிகையிட்டு அண்டமெல்லாம் பார்த்து**
**அறியலா மனமடங்க லறியச்சித்தே.**

**– அகத்தியர் தத்துவம் 300 – கவி எண் 10.**

**ஆமப்பா புலிகரடி சிங்கமதம் பொங்கும் யானையின் மேலேறி நடத்துவது லெகுவாகும்** – புலி, கரடி, சிங்கம் போன்ற மிருகங்களிடம் சாதாரண மனிதன் நெருங்க முடியாது. புலி, சிங்கம் மிகப்பெரிய ஆற்றல் பொருந்தியது. அதேபோன்று கரடியும் வலிமை பொருந்தியது.

யானை உடலால் மிகப்பெரிய வல்லமையுடையது, கூரிய தந்தங்களை உடையது. காட்டில் வாழும் மற்ற மிருகங்களை விட புலி, சிங்கம், கரடி, யானை ஆகியவை ஆற்றல் பொருந்தியவை. ஏனென்றால் இவை எந்த ஜீவராசிக்கும் பயப்படாது. எதையும் வெல்லக் கூடிய ஆற்றல் இவைகளுக்கு உண்டு.

யானையின் தோற்றம் பிறருக்கு அச்சம் தரும். அதன் செயல்கள் மிகவும் கொடுமையானது. யானை பருத்த உடம்பு, யானையை விட புலி பார்ப்பதற்கு சிறியதாக இருக்கும். ஆனால் புலி உருமினால் யானை நடுங்கும்.

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

**– திருக்குறள் – ஊக்கம் உடைமை – குறள் எண் 599.**

யானை பருத்த உடம்பு, கூரிய தந்தங்களுடன் இருக்கும். யானையை விட, தோற்றத்தில் புலி பார்க்க சிறியதாக இருக்கும். ஆனால் புலியைப் பார்த்து யானை அச்சப்படும். புலி உருமும்போதே யானை நடுநடுங்கும். ஊக்கமுடையவன் சிறியவனாக இருந்தாலும், வலிமை பொருந்தியவனை வெல்வான் என்பது இதன் சாரம்.

**ஆமப்பா புலிகரடி சிங்கமதம் பொங்கும் யானையின் மேலேறி நடத்துவது லெகுவாகும்** – புலி, கரடி, சிங்கத்தை வெல்ல முடியாது. இந்த மூன்றையும் ஒன்றுபடுத்தி யானையின் மேலேற்றி நடத்துவது இலகுவாகும் என்றால் அது மனிதவர்க்கத்தால் முடியுமா?

**செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

**– திருக்குறள் – நீத்தார் பெருமை – குறள் எண் 26.**

மூச்சுக்காற்றின் துணை கொண்டு இந்த ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்களால் சாதிக்க முடியாத ஒன்றை சாதிப்பார்கள். எல்லாம்வல்ல இயற்கையின் துணை கொண்டே, இப்பேர்ப்பட்ட ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் கடினம் என்று சொல்லக்கூடிய காரியத்தை இவர்கள் மிக எளிதாக செய்வார்கள். நாமும் இந்த ஆற்றலை பெற வேண்டும்.

**ஓமப்பா பெரியரவைப் பிடித்து வாட்டி**
**யோரிடத்தி லடைக்கலமா யெந்தநாளும்**

பாம்பு என்றால் படையே நடுங்கும். பார்த்து பயப்படக்கூடிய மிக நீண்ட கருநாகத்தை பிடித்து அடைக்கலாம் என்கிறார். இது எல்லோராலும் முடியாது. இதை செய்வதால் மற்றவர்களை விட, இவர்கள் உயர்ந்தவர்கள்.

**சோமப்பா லுண்டினமை யாயிருக்கலாம்பின்**
**சொர்ணமது செய்யலாஞ் செம்பைத்தானும்**

பாம்பை தன்வசப்படுத்தி ஓரிடத்தில் அடைத்து வைக்கலாம். அதுமட்டுமல்ல சோமப்பால் என்கிற அமிழ்தபானம் ஒவ்வொரு மனித தேகத்திலும் உண்டு. மரணமில்லாப் பெருவாழ்வை தரக்கூடிய அமிழ்தபானம் ஒவ்வொரு மனிதனுள்ளும் உண்டு. அது உச்சியில் இருந்து வரும். அந்த அமிழ்தபானத்தை முறைப்படி உண்டால் என்றும் இளமையோடு இருக்கலாம். இதுவும் மற்றவர்களால் செய்ய முடியாத ஒன்று.

**சொர்ணமது செய்யலாஞ் செம்பைத்தானும்** – செம்பை தங்கமாக்கலாம். இது மற்றவர்களால் செய்ய முடியாது. செம்பில் களிம்பு அதிகமாக இருக்கும். களிம்பு அற்ற ஒன்று தங்கம். ஆனால் செம்பே களிம்புதான். பல்வேறு ரசாயன முறைகளைக் கொண்டு செம்பை தங்கமாக்கலாம்.

உலகத்தில் சிறந்தது நவஉலோகம். அதில் தலைசிறந்தது தங்கம்தான். அதில் களிம்பு இருக்காது. ஆனால் செம்பில் உள்ள அத்தனையும் களிம்பே. செம்பை விட்டு களிம்பு போகவே போகாது. அதையும் தங்கமாக்கலாம்.

**ஆமப்பா குளிகையிட்டு அண்டமெல்லாம் பார்த்து**
**அறியலா மனமடங்க லறியச்சித்தே.**

குளிகை என்பது மூச்சுக்காற்று. புருவமத்தியில் ஒடுங்குகின்ற காற்றிற்கு குளிகை என்று பொருள். அந்தக் காற்று வசப்பட்ட மக்கள், இங்கிருந்தே உலகத்தை காண்கிறார்கள். மனிதவர்க்கத்தை விட அவர்கள் உயர்ந்தவர்கள். அவர்களுடைய ஆற்றல் சிறந்தது. இதைத்தான் செயற்கரிய செய்வார் பெரியர் என்கிறார். அந்த ஆற்றலைப் பெறுவதற்காக யோகாப்பியாசம், வாசிப்பழக்கத்தை மேற்கொள்கிறார்கள்.

பிராணாயாமம் என்பது மனிதவர்க்கத்திற்கு பொதுவானது. முறைப்படி ஆசான் துணைகொண்டு இரண்டுபக்கம் வருகின்ற மூச்சுக்காற்றை இழுத்து ஸ்தம்பித்து புருவமத்தியில் செலுத்துகிறார்கள். அப்படி செலுத்திய காற்றிற்கு குளிகை என்று பொருளுண்டு. குளிகை என்பது சிறிய காற்று. அந்தக் காற்று தங்கியவுடன் இந்த ஆற்றலை அவர்கள் பெறுகிறார்கள்.

**மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்**
**முந்நீருள் இருப்பினும் மூச்ச டக்குவோம்**
**தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்**
**தார்வேந்தன் முன்புநீநின் றாடு பாம்பே.**

**– மகான் பாம்பாட்டி சித்தர் – சித்தர் வல்லபங் கூறல் – கவி எண் 30.**

**மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்** – குளிகை என்று சொல்லப்பட்ட சிறிய காற்று வசப்பட்டதாலே அக்கினிக்குள்ளும் சென்று வருவார்கள். அக்கினி எல்லாவற்றையும் தன்வயப்படுத்தும், கருணையே காட்டாது. எந்த உயிராக இருந்தாலும் தன்வயப்படுத்தும். அன்புள்ளவனாக இருந்தாலும் சரி, பாவியாக இருந்தாலும் சரி நெருப்பை சார்ந்து விட்டால் கருணையே காட்டாமல் எரித்து விடும். ஆனால் இவர்கள் அக்கினிக்குள்ளே சென்று வருவார்கள். வாசி வசப்பட்ட மக்கள் மட்டுமே இந்த ஆற்றலைப் பெற முடியும்.

**மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்**
**முந்நீருள் இருப்பினும் மூச்ச டக்குவோம்**
**தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்**
**தார்வேந்தன் முன்புநீநின் றாடு பாம்பே.**

**– மகான் பாம்பாட்டி சித்தர் – சித்தர் வல்லபங் கூறல் – கவி எண் 30.**

இந்த ஆற்றல் மனிதனுக்கு கிடைக்காது. ஆனால் அவர்கள் மனிதனாக தோன்றி ஞானியாக ஆனவர்கள். அவர்கள் இந்த ஆற்றலை பெற்றிருப்பார்கள்.

**செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

**– திருக்குறள் – நீத்தார் பெருமை – குறள் எண் 26.**

மற்றவர்களால் சிந்தித்து பார்க்க முடியாத காரியத்தை செய்தால் அவர் பெரியவர். வயதில் சிறியவராக இருந்தாலும் அவர்கள் பெரியவரே. வாசி வசப்பட்டதால் இவ்வளவு பெரிய ஆற்றலை அவர்கள் பெறுகிறார்கள். மூச்சுக்காற்றைப் பற்றி அறிந்த மக்கள்தான் இந்த ஆற்றலைப் பெற முடியும்.

நாள் ஒன்றுக்கு 21,600 முறை சுவாசம் வந்து போகும். நாம் தூங்கினாலும் விழித்திருந்தாலும் நாள் ஒன்றுக்கு 21,600 முறை சுவாசம் வந்து போகும். எப்போதும் இப்படித்தான் மூச்சுக்காற்று வந்து போகும். மூச்சுக்காற்றின்

இயல்பு யாருக்கும் தெரியாது. இதுபோன்ற ஆற்றலை நாமும் பெற வேண்டும். இப்படி ஆசைப்படுவதில் தவறில்லை. எல்லோரும் இந்த ஆற்றலைப் பெற வேண்டுமென்று ஆசை இருப்பது இயல்புதான்.

**தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்**
**துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்குவோம்**
**ஆணைப்பெண்ணும் பெண்ணையாணும் ஆகச்செய்குவோம்**
**ஆரவாரித் தெதிராய்நின் றாடு பாம்பே.**

**– மகான் பாம்பாட்டி சித்தர் – சித்தர் வல்லபங் கூறல் – கவி எண் 27.**

**தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம் –** பெரிய தூணை சிறு துரும்பாக ஆக்குவார்கள். சிறிய துரும்பை பெரிய தூணாக ஆக்குவார்கள். துரும்பு என்பது சிறியது. தூண் என்பது பெரியது.

**ஆணைப்பெண்ணும் பெண்ணையாணும் ஆகச்செய்குவோம் –** ஆணைப் பெண்ணாக்குவது என்பது உடைமாற்றும் விஷயமல்ல. ஆண்களை பெண் உடையை தரிக்கச் செய்து, பெண் வேஷமிடலாம். அதேபோன்று பெண்ணை, ஆண் உடையை தரிக்கச் செய்து ஆண் வேஷமிடலாம். ஆனால் இங்கே உடைதான் மாறுமே தவிர, உடல் மாறாது. ஆனால் ஞானிகள் உடலை மாற்றுவார்கள். இப்படிப்பட்ட ஆற்றல் ஞானிகளுக்கு மட்டுமே உண்டு.

உயிர் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றே. ஆன்மாவிற்கு ஆண் பெண் பேதம் கிடையாது. ஆனால் அந்த உயிர் தாங்கிய உடல்தான் ஆண் பெண் தேகமாகும். உயிர் எல்லோருக்கும் ஒன்றுதான். உடம்பில்தான் ஆண் பெண் பேதமிருக்கும். இதையும் ஞானிகள் மாற்றுவார்கள். இதையெல்லாம் மனிதர்களால் செய்ய முடியாத காரியம்.

பிராணாயாமம் என்று சொல்லப்பட்ட யோகாப்பியாசத்தை செய்ததால், இந்த காரியத்தை சாதித்தார்கள்.

**வேதன்செய்த சிருட்டிகள்போல் வேறு செய்குவோம்**
**வேதனையு மெங்கள்கீழே மேவச் செய்குவோம்**
**நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்**
**நாங்கள் செய்யும் செய்கையிதென் றாடு பாம்பே.**

**– மகான் பாம்பாட்டி சித்தர் – சித்தர் வல்லபங் கூறல் – கவி எண் 32.**

**வேதன்செய்த சிருட்டிகள்போல் வேறு செய்குவோம் –** பிரம்மதேவன் செய்கின்ற காரியத்தை நாங்கள் செய்வோம். ஒருவனை பிரம்மதேவன் ஆணாக படைத்திருந்தால், அவனை நாங்கள் பெண்ணாக ஆக்குவோம். அந்த வல்லமை எங்களுக்கு இருக்கிறது என்கிறார்.

**வேதனையு மெங்கள்கீழே மேவச் செய்குவோம்** – பிரம்மதேவனின் ஆட்சிக்கு உட்பட்டு உயிர்கள் தோன்றுகின்றன. ஆனால் இன்று முதல் எனது ஆட்சிக்குட்பட்டு பிரம்மதேவன் நடக்க வேண்டும் என்கிறார். அந்த அளவிற்கு ஞானிகள் ஆற்றலை பெற்றிருக்கிறார்கள்.

**நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம் நாங்கள் செய்யும் செய்கையிதென் றாடு பாம்பே** – வந்துபோகின்ற மூச்சுக்காற்றை வசப்படுத்தியதாலே ஞானிகள் இப்படிப்பட்ட ஆற்றலை பெற்றிருக்கிறார்கள். அதை நாமும் பெற வேண்டும்.

**எட்டுமலை களைப்பந்தாய் எடுத்தெ றிகுவோம்**
**ஏழுகட லையுங்குடித் தேப்ப மிடுவோம்**
**மட்டுப்படா மணலையும் மதித்து விடுவோம்**
**மகாராசன் முன்புநீநின் றாடு பாம்பே.**

**– மகான் பாம்பாட்டி சித்தர் – சித்தர் வல்லபங் கூறல் – கவி எண் 28.**

**ஏழுகட லையுங்குடித் தேப்ப மிடுவோம்** – ஏழு கடலையும் குடித்து ஏப்பம் விடுவது என்பது சின்ன விஷயமல்ல. அதையும் ஞானிகள் செய்வார்கள். ஆணைப் பெண்ணாக்குவது, பெண்ணை ஆணாக்குவது, ஏழு கடலை குடித்து ஏப்பம் விடுவது போன்றவற்றை ஞானிகள் மட்டுமே செய்ய முடியும். மனிதர்கள் இந்த பெருமைக்குரிய ஆற்றலை பெறுவதற்கு, ஞானிகளின் திருவடிகளைப் பற்ற வேண்டும்.

இப்படிப்பட்ட பெருமைக்குரிய செயலை நாமும் சாதிக்க வேண்டுமென்று ஆசை கொண்டு, சிலபேர் மூச்சுக்காற்றைப் பற்றி சிந்தித்து அதை வசப்படுத்த முயற்சிப்பார்கள்.

மூச்சுக்காற்றை வசப்படுத்துவதற்கு முயற்சிப்பதும், அதை வசப்படுத்த ஆசைப்படுவதும், பெருமைக்குரிய ஆற்றலைப் பெற ஆசைப்படுவதும் நியாயமே.

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

**– திருக்குறள் – ஊக்கம் உடைமை – குறள் எண் 596.**

நினைப்பதை உயர்வாக நினைக்கலாம். இன்று முதல் ஞானியாகவும், மூன்று உலகை ஆள்வதற்கும் ஆசைப்படலாம். ஆனால் அதற்கு திண்ணியமாகவும், உறுதியாகவும் முயற்சி செய்ய வேண்டும். ஒரு காலத்தில் தோல்வி அடைந்தாலும் நினைப்பதை உயர்வாக நினைக்கலாம் என்று மகான் திருவள்ளுவர் சொல்கிறார்.

இதுபோன்ற ஆற்றலை பெற வேண்டுமென்று, மக்களும் ஆசைப்படுகிறார்கள். இப்பேர்ப்பட்ட பெருமைக்குரிய ஆற்றலை பெறுவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று ஞானிகளிடம் அணுகி கேட்கும்போது, நான் என்னுள் வந்துபோகின்ற மூச்சுக்காற்றை, எனது ஆசான் துணை கொண்டு ஸ்தம்பித்து நிறுத்தி பத்தாம் வாசல் என்று சொல்லப்பட்ட புருவமத்தி என்ற இடத்தில் காற்றை செலுத்தி அந்த வாய்ப்பை பெற்றேன் என்று சொல்வார்கள்.

ஆசான் பாதத்தைப் பற்றி நின்ற காரணத்தினாலே, நாங்கள் மேற்கொண்ட செயல் முற்றுப்பெற்று இந்த வெற்றியை பெற்றோம் என்கிறார்.

இது காலங்கடந்த செயல், இது நமக்கு தேவையில்லை என்று ஆசான் சொன்னதை விட்டுவிட்டு, விரைவாக அடைய வேண்டுமென்று, தன்னுடைய இஷ்டத்திற்கு ஆசான் துணையின்றி மூச்சுக்காற்றை நிறுத்தி ஸ்தம்பித்து கட்டுவான். இவனுடைய இஷ்டத்திற்கு மூச்சுக்காற்றை வசப்படுத்த முயற்சிப்பான். இதனுடைய விளைவு உயிருக்கு ஆபத்தாக முடியும்.

பண்பட்ட மக்கள், அனுபவத்தில் வந்த மக்கள், அனுபவப்பட்ட அனுபூதிமான்கள் சொல்லிதான் வாசிப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கை வீணாகப் போகும். எடுத்துக் கொண்ட காரியம் தடைபடும்.

இலட்சியத்தை அடைவதற்கு முன்னே ஜீவன் பிரியக் கூடும். விரைவில் அவன் தனது வாழ்நாளை இழந்துவிடுவான்.

வாசிப் பயிற்சியை முறைப்படி செய்த மக்கள்தான், ஆதாயத்தை பெற முடியும். வாசிப்பயிற்சியை முறைப்படி செய்த மக்களின் உபாயத்தை நாம் பெற வேண்டும்.

ஆனால் இங்கே வாசிப் பயிற்சியை முறைப்படி செய்யாத மக்களின் அபாயத்தை இங்கே சொல்கிறோம்.

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக்**
**கபாலமும் திறந்தனர் கோடி**
**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி**
**கலங்கினோர் அவர்ஒரு கோடி**
**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி**
**சொக்கினோர் அவர்ஒரு கோடி**
**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச்**
**சுரமதால் இறந்தனர் கோடி**
**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி**
**உள்ளடங் கிணர்களுங் கோடி**
**உயர சாண்நீள முழுவதும் எழும்பி**
**ஒங்கியே ஒடுங்கினோர் கோடி**
**பேண அதிசார பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

**– புலஸ்தியர் கற்பம் 300 – கவி எண் 97.**

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக் கபாலமும் திறந்தனர் கோடி –** பிராணாயாமம் செய்து வாசி வசப்பட்டு அதன் மூலமாக பல நூறு கோடி ஆண்டுகளை ஒரு நொடிப்பொழுதாக வாழக் கூடிய ஆற்றலைப் பெற்றவர்கள் ஞானிகள்.

**சோமப்பா லுண்டினமை யாயிருக்கலாம்பின்**
**சொர்ணமது செய்யலாஞ் செம்பைத்தானும்**

சோமப்பாலை உண்டு என்றும் இளமையோடு இருக்கலாம். இதுமட்டுமல்ல சொர்ணம் என்று சொல்லுகின்ற தங்கமும் செய்யலாம் என்கிறார். எப்போதும் யௌவன பருவத்தோடு இருக்கலாம், எந்த காலத்திலும் முதுமை வராது.

**நரைமரண மூப்பறியா நல்லஉடம் பினரே**
**நற்குலத்தார் எனஅறியீர் நானிலத்தீர் நீவிர்**
**வரையில்உயர் குலம்என்றும் தாழ்ந்தகுலம் என்றும்**
**வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர்**
**புரையுறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்என் றறிந்தே**
**புத்தமுதம் உண்டோங்கும் புனிதகுலம் பெறவே**
**உரைபெறும்என் தனித்தந்தை வருகின்ற தருணம்**
**உற்றதிவண் உற்றிடுவீர் உண்மைஉரைத் தேனே.**

**– திருஅருட்பா – ஆறாம் திருமுறை – உறுதி கூறல் 2 – கவி எண் 1479.**

**நரைமரண மூப்பறியா நல்லஉடம் பினரே நற்குலத்தார் –** நரைமரணம் மூப்பு அறியாதவரே நற்குலத்தார், நல்ல உடம்பினர் என்கிறார். இதுபோன்ற உயர்ந்த லட்சியத்தை அடைவதற்கு மூச்சுக்காற்றைப் பற்றி அறிந்து, அதை அடக்கிய காரணத்தினாலே இந்த ஆற்றலை ஞானிகள் பெற்றார்கள்.

மூச்சுக்காற்றின் இரகசியம் அறியாமல், வயிற்றிலே உணவு இருக்கும்போது, அதன் இயல்பறியாமல் மூச்சுக்காற்றை கட்டுவான். அதனால் இவனுடைய உடம்பு கெட்டுவிடும்.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**
**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்**
**வளியினும் வேட்டு வளியனு மாமே.**

**– திருமந்திரம் – பிராணாயாமம் – கவி எண் 569.**

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில் –** இரகசியமான வார்த்தை. காற்றை வாங்கி வயத்தில் அடக்கினால், **பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம் –** முதுமை வந்தாலும் மீண்டும் இளமை வரும் என்பது மகான் திருமூலதேவர் வாக்காகும்.

**தெளியக் குருவின் திருவருள் பெற்றால் –** குருவின் திருவருள் துணை கொண்டுதான், இந்த தத்துவங்களை அறிந்து கொள்ள முடியும். குருவின் திருவருளைப் பெற்றாலன்றி இதை அறிய முடியாது. உற்ற குருவை அறிந்து, குருவின் திருவருளைப் பெற்று, குருவின் துணையோடு வாசிப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

வயிற்றில் உணவு இருக்கும்போது மூச்சுக்காற்றை இழுத்து நிறுத்துவார்கள். உற்ற செயலை அறிந்து கொள்ள முயற்சிக்காமல், அவரவர் இஷ்டத்திற்கு செயல்படுவார்கள். இதனால் அவர்கள் வாழ்க்கை பாழ்பட்டுவிடும்.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**

வயிற்றில் எந்த இடத்தில் காற்றை அடக்குவது என்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அதை ஆசான் துணை கொண்டுதான் அறிய வேண்டும்.

முதுமை வந்தாலும் மீண்டும் இளமை பொருந்திய உடம்பு வரும் என்று சொன்னதற்கு காரணம் இந்த காற்றுதான். ஞானிகள் அனைவரும் மூச்சுக்காற்றைப் பற்றி அறிந்து அடக்கிய மக்களே. மூச்சுக்காற்றை அடக்கி, அடங்கிய மக்களே ஞானிகள்.

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக் கபாலமும் திறந்தனர் கோடி –** வாசிக் காற்றைப் பற்றி அறியாமல், முறை தவறி செய்ததால், வந்த அபாயத்தைப் பற்றி கூறுகிறேன்.

கட்டிய மூச்சுக்காற்றை வெளியே விடமாட்டார்கள். உள்ளே தங்கிய காற்றால் பிராணன் அதிகமாகும். உள்கருவி கரணங்கள் இயக்கம் காரணமாக, மென்மேலும் காற்று உருவாகத் துவங்கும். இப்படி காற்று மேலும் மேலும் உருவாகிக் கொண்டிருந்தாலும், காற்றை வெளியே விடமாட்டான். அப்படி உருவான காற்று நான்குபக்கமும் சுற்றித் தாக்கும். காற்று போக வழியில்லாமல் கபாலத்தின் மேல்பக்கம் உள்ள ஜவ்வை தாக்கி கிழித்து வெளியேறும். கபாலத்தின் மேல்பக்கம் உள்ள மெல்லிய ஜவ்வை கிழித்துக் கொண்டு, காற்று வெளியே வரும்போது கண், காது, மூக்கு வழியாக இரத்தம் வந்து இறந்து போவான். இப்படி இறந்தவர்கள் ஒரு கோடி பேர் என்கிறார். இதுபோன்ற தவறு செய்யக் கூடாது. இப்படி செய்தால் இறந்து போவார்கள்.

**தெளியக் குருவின் திருவருள் பெற்றால் –** இந்தத் தத்துவத்தை தெரிந்து கொள்வதற்கு குருவின் திருவருளைப் பெற வேண்டும். அப்படி குருவின் திருவருளைப் பெறாமல் செய்தால் விளைவுகள் தவறாக இருக்கும்.

வாசியை எப்படி கட்ட வேண்டுமென்பதை குருவின் திருவருளால்தான் உணர முடியும். வாசி என்பது மலரினும் மென்மையானது. பிராணாயாமம் என்பது கரடுமுரடான செயல் அல்ல. அது மென்மையானது. அனிச்சம் பூவை முகர்ந்தால் வாடிவிடும். அதைவிட வாசி ஒரு கோடி பங்கு மென்மையானதாகும். அந்த மென்மையுள்ள வாசி என்கிற செயலை, மென்மையான அறிவை கொண்டு அணுக வேண்டும்.

திண்மையான, உறுதியான, துல்லியமான, கணக்கான, மிருதுவான அறிவைக் கொண்டு, ஊசி முனையைவிட அதிக கூர்மை கொண்டு, காண வேண்டிய இந்த வாசியை, இவன் கரடுமுரடான அறிவைக் கொண்டு கரடுமுரடாக செய்வான்.

கரடுமுரடான அறிவைக் கொண்டு இதை செய்யக் கூடாது. பிராணாயாமம் என்று சொல்லப்பட்ட வாசிப்பழக்கம் என்பது மலரைவிட மென்மையானது. அதை செய்வதற்குரிய அறிவு, மலரைவிட மென்மையாக இருக்க வேண்டும்.

அதற்குரிய அறிவு மலரைவிட மென்மையாக இருந்தாலன்றி, இந்த காரியத்தை சாதிக்க முடியாது. வாசியைப் பற்றி பேசினாலும், வாசியைப் பற்றி அறியக் கூடிய மென்மையான அறிவு நம்மிடம் இல்லை. இப்பொழுது உள்ள அறிவு கடின தன்மையுடனும், நுணுக்கமில்லாமலும், கரடுமுரடாகவும் இருக்கிறது.

பிராணாயாமம் என்பது நுணுக்கமானது, மலரை விட மென்மையானது. வாசியை அணுகுவதற்கு நமக்கு மென்மையான அறிவு இருக்க வேண்டும். இல்லையென்றால் வாசியை தவறாக செய்து உயிரை இழப்பார்கள்.

ஆனால் இதற்கொரு உபாயம் உண்டு. இந்த மலரைவிட மென்மையான வாசியை அணுகுவதற்கு, நெருங்குவதற்கு, சார்வதற்கு, பற்றுவதற்கு, பிடிப்பதற்கு ஆசான் அகத்தீசர், மகான் கருவூர்தேவர், மகான் திருமூலதேவர் போன்ற மென்மையான அறிவுள்ள மக்களின் திருவடியைப் பற்ற வேண்டும். இப்படி ஞானிகள் திருவடியைப் பற்றினால், அட்டமாசித்தியை தரக்கூடிய, மரணமிலாப் பெருவாழ்வு என்கிற மேம்பட்ட வாழ்வை நாம் பெறலாம். இதை ஞானிகள் மென்மையான உள்ளத்தைக் கொண்டு அணுகினார்கள்.

ஞானிகளின் பாதத்தைப் பற்றும்போது, அறிவு மென்மையாகும், வாசியும் மென்மையாகும். இப்படித்தான் அணுக வேண்டுமென்று அவர்கள் சுட்டிக்காட்டுவார்கள்.

வாசிக்காற்று மென்மையான ஒன்று. அதை மென்மையான அறிவை கொண்டு பார்க்க வேண்டும். அப்படி பார்க்காத மக்கள், வாசியை தவறாக செய்து இறந்து விடுவார்கள். காற்றை முறைப்படி கட்டாத மக்கள் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வந்து இறந்து போவார்கள்.

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக் கபாலமும் திறந்தனர் கோடி** – தவறாக வாசி யோகம் செய்து இறந்தனர் ஒரு கோடி என்கிறார். மற்றவர்கள் அறிய முடியாத, உணர முடியாத, சிந்திக்க முடியாத மரணமில்லாப் பெருவாழ்வுக்குரிய மார்க்கத்தை அடைவதற்காக, ஆசையின் காரணமாக வாசிப்பழக்கத்தை தவறாக செய்து இறந்தனர் ஒரு கோடி என்கிறார்.

உண்மைப் பொருளை உணராத மூடத்தனமான ஆசான் சுட்டிக்காட்டிய காரணத்தினாலே தவறான வாசிப்பழக்கத்தை மேற்கொண்டு இறந்து போவான்.

முறைப்படி உணர்ந்த ஆசான் சுட்டிக்காட்ட வேண்டும். அப்பொழுதுதான் வாசிப்பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி கலங்கினோர் அவர்ஒரு கோடி** – அதிகமாக காற்றை நிறுத்திய காரணத்தினால், கபாலம் வெடித்து கண், காது, மூக்கு, வாய் வழியே இரத்தம் வந்து இறந்து போவான். காற்றை சிறிதுசிறிதாக உள்ளே நிறுத்தியதன் காரணமாக, குன்மநோய் வந்து இறந்து போவான்.

மலச்சிக்கல் இருக்கக் கூடாது, வயிற்றிலே பழைய உணவு இருக்கக் கூடாது, மேலும் வாத, பித்த, சிலேத்துமத்தை அறிந்துதான் வாசிப்பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். மிக நுணுக்கமான மென்மையான அறிவுள்ள மக்கள்தான் வாசிப்பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

இதை அறியாமல் வாசிப்பழக்கத்தை மேற்கொண்டு காற்றை நிறுத்துவான், குன்ம நோய் வந்து இறந்து போவான். குன்மநோய் என்பது வயிற்றுவலி. உந்தியை சுற்றி வலி இருந்து கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட துன்பத்தை அடைந்து இறந்து போவான். ஆனால் நாம் எல்லோரும் ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றுகின்ற மக்கள். நமக்கு அந்த துன்பம் வரவே வராது, வரவும் வேண்டாம்.

**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி சொக்கினோர் அவர்ஒரு கோடி** – சிலபேர் வாசியை ஸ்தம்பித்து அப்படியே நிசப்தமாக நிற்பார்கள். அப்படியே மூச்சுக்காற்று நின்றுவிடும். இப்படி பல கோடி மக்கள் இறந்து போனார்கள். இதையெல்லாம் நாங்கள் ஏன் சொல்கிறோம் என்றால், தவறான வாசிப்பழக்கத்தை மேற்கொண்டு நீங்களும் இறந்து போகாதீர்கள் என்று உங்கள் மீது கருணை கொண்டு சொல்கிறோம்.

சமுதாயத்திலே வாசிப்பழக்கத்தை தவறாக ஒன்றுகிடக்க ஒன்று செய்துவிட்டு பேதி வந்தும், குன்மநோய் வந்தும், கபாலம் வெடித்தும் இறந்து போவார்கள். இப்படி வாசிப்பழக்கத்தை தவறாக செய்துவிட்டு அல்லற்படும் மக்களுக்கு இந்த செய்தி போக வேண்டும் என்பதற்காக இந்த உண்மைகளை நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம்.

மென்மையான அறிவுள்ள மக்கள் திண்மையான காரியத்தைச் செய்வார்கள். மென்மையான அறிவில்லாத மக்கள் திண்மையான காரியத்தை சாதிக்க முடியாது. ஆகவே திண்மையான காரியத்தை செய்வதற்கு மென்மையான அறிவு தேவை.

**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி சொக்கினோர் அவர்ஒரு கோடி** – மெய் என்றால் உடம்பு என்று பொருள். தன்னை மறந்த நிலை என்று சொல்வார்கள். அது தன்னை மறந்தநிலை அல்ல. மிகமிக சிறப்பறிவுள்ள மக்கள் செய்ய வேண்டிய ஒன்று. அப்படியே நிசப்தமாக நின்று விடுவார்கள்.

**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச் சுரமதால் இறந்தனர் கோடி** – உடம்பில் உள்ள உஷ்ணத்தை அறிந்து கொள்ளாமல் மறுபடியும் மறுபடியும் மூச்சுக்காற்றை கட்டி பிராணாயாமம் செய்வார்கள். அதனால் ஏற்படும் உஷ்ண வாயு கணுவுக்குகணுவுக்கு வந்து தங்கி கொள்ளும். அதன் பிறகு மூன்று வருடத்திற்குள் அவனது வாழ்க்கை முடிந்துவிடும். எந்த காலத்தில் முறை தவறி வாசியைப் பார்த்தானோ, அன்றே அவன் எமனுக்கு தலைவணங்கி விட்டான் என்று அர்த்தம்.

**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச் சுரமதால் இறந்தனர் கோடி** – தவறான வாசிப்பழக்கத்தால் காய்ச்சல் வந்து கோடி பேர் இறந்தனர் என்கிறார். இதெல்லாம் முறை தவறிய வாசிப்பழக்கம் மேற்கொண்டதால் வந்த விளைவுகள் ஆகும்.

**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி உள்ளடங் கிணர்களுங் கோடி** – யோகத்தில் அடையோகம் என்ற ஒன்று உண்டு. நாக்கை மேல்நோக்கி உண்ணாக்கில் வைப்பார்கள். இதை அடையோகம் என்று இவன் தவறாக புரிந்து கொண்டு செய்வான். அது மடயோகம், அடையோகமல்ல. திடயோக மக்கள் இதுபோன்ற அடையோகத்தை செய்ய மாட்டார்கள்.

சிலபேர் நாக்கை உண்ணாக்கில் வைத்து அழுத்துவான். இன்னும் சிலபேர் அடிநாக்கை கொஞ்சம் கொஞ்சமாக அறுத்து ஆற வைத்து உண்ணாக்கில் வைத்து அழுத்துவான்.

ஞானியர்கள் உண்ணாக்கை அண்ணாக்கில் செலுத்து என்று சொல்வார்கள். உள்காற்றையும் வெளிக்காற்றையும் சேர்த்து புருவமத்தியில் செலுத்த வேண்டிய முறையை, இவன் ஞானியர்களின் பரிபாஷையை அறியாமல் நாக்கை உண்ணாக்கில் வைத்து அழுத்துவான். ஆசான் தயவு தேவையில்லை என்று தானாக இவன் யோகம் செய்வான்.

**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி உள்ளடங் கிணர்களுங் கோடி** – நாக்கை உண்ணாக்கில் வைத்து அழுத்துவான், அப்படியே நின்று விடும். இவன் அடி நாக்கை அறுத்து, ஆற வைத்து உண்ணாக்கில் வைத்து அழுத்தியதால், மீண்டும் அந்த நாக்கு வெளியே வராமல் மூச்சடைத்து இறந்து போவான். ஏட்டு படிப்பினால் செய்யும் காரியம் இப்படித்தான் தவறாக முடியும்.

இவனால் பக்கத்தில் உள்ளவனை அழைத்து என்னைக் காப்பாற்று என்று கூட சொல்ல முடியாது. இவனுக்கு என்ன நடந்தது, என்ன செய்ய வேண்டுமென்று பக்கத்தில் உள்ளவனுக்கு தெரியாது. இவனுக்கு என்ன ஆபத்து வந்தது? ஏன் பதறுகிறான்? என்ன காரணம்? என்பது பக்கத்தில் உள்ளவனுக்கும் தெரியாது. பத்தே நிமிடத்தில் அவனுடைய ஆயுள் முடிந்துவிடும். அதற்குள் அவனுக்கு உதவி செய்ய முடியாது.

சிலபேர் தேனை உறிஞ்சி குடிப்பார்கள். அப்படி தேனை உறிஞ்சி குடிக்கும்போது, புரையேறினால் அந்த தேன் சுவாசக்குழாயில் படிந்துவிடும் வெளியே வராது. இதனால் மரணம் அடைவான். இதேபோன்று இவன் மேலே நாக்கை செலுத்தி அழுத்தும்போது, நாக்கு உள்ளே அழுந்திவிடும், திரும்பி வராது. அப்படியே மூச்சு அடங்கிவிடும். இப்படி இறந்தனர் பல கோடி என்கிறார்.

பல கோடி ஆண்டுகள் இளமையோடு வாழ்வதற்கு ஆசைப்பட்ட காரணத்தினாலே, ஆசானை துணை கொள்ளாத காரணத்தினாலே, விரைவாக முன்னேற வேண்டுமென்று ஆசைப்பட்ட காரணத்தினாலே, தவறாக வாசிப்பழக்கத்தை செய்து இறந்த மக்களுடைய செயல் இது என்கிறார்.

**உயர சாண்நீள முழுவதும் எழும்பி ஓங்கியே ஒடுங்கினோர் கோடி** – காற்றை ஸ்தம்பித்து உள்ளே நிறுத்தி நிறுத்தி, வாசியை செய்வான். அதனால் உடம்பிற்குள்ளே காற்று ஸ்தம்பித்துவிடும். அவன் வாசிப்பழக்கம் செய்யும்போது, ஒரு சாண் உயரத்திற்கு உடம்பு மெல்ல மேலெழும்பும். இதுபோன்று செய்து காட்டுவான். இதெல்லாம் மிகச்சிறந்த யோகாப்பியாசம். இதை பிராணாயாமம் என்று நினைத்திருப்பான். இவனும் இறந்து போவான்.

**பேண அதிசார பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

வாசி வசப்பட்டு, மூச்சுக்காற்றை அறிந்து, பிராணாயாமம் என்ற இரகசியத்தை அறிந்து மரணமில்லாப் பெருவாழ்வை பெற வேண்டும் என்பதற்காக நாமெல்லாம் இங்கே கூடியிருக்கிறோம்.

நமது துன்பதுயரங்களை தீர்த்துக் கொள்வதற்கும், ஆன்மலாபம் பெறுவதற்கும்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவதற்குரிய மார்க்கத்தை அறிந்து கொள்வதற்காகவும் அடைவதற்காகவும் நாம் இங்கே கூடியிருக்கிறோம். முன் ஜென்மத்தில் முயற்சி செய்ததனால், இங்கே வந்திருக்கலாம். ஆசானுடைய அருளைப் பெறுவதற்காக வந்திருக்கலாம். இப்படி பல்வேறு நோக்கத்திற்காக குடிலிற்கு வந்திருக்கலாம்.

பிராணாயாமம் என்று சொல்லப்பட்ட இரகசியத்தை அறிந்து, வாசி வசப்பட்டு மரணமிலாப் பெருவாழ்விற்குரிய மார்க்கத்தை அறிவதற்கு முயற்சித்தாலும் சரி அல்லது தனக்குள்ள துன்பதுயரங்களை தீர்த்துக் கொள்ள ஆசைப்பட்டாலும் சரி, அனைத்தும் கைகூடும். அதற்கும் வாய்ப்பு உண்டு, இதற்கும் வாய்ப்பு உண்டு. ஏனென்றால் ஓங்காரக்குடில், ஞானிகள் நடமாடுகின்ற இடம்.

ஆசையின் காரணமாக சிலபேர் தவறுகள் செய்வதால், அதனால் வருகின்ற விளைவுகளைப் பற்றி இங்கே பேசுகிறோம். இந்தக் கருத்துகளை சொன்னது மகான் புலத்தீசர் என்று சொல்லப்பட்ட மாபெரும் யோகி. மகான் புலத்தீசர் ஆசான் அகத்தீசரால் பிரம்மயோகி என்று பட்டம் பெற்றவர்.

நாங்கள் சொல்லுகின்ற கருத்துகளை கேட்டு, நீங்கள் பின்பற்றுவது நல்லது. இது மகான் வாக்கு இதைக் கேட்டு பின்பற்றினால் உங்களுக்கும் புண்ணியம் கிடைக்கும் என்பதற்காக பேசி வருகிறோம். முறை தவறி வாசிப்பழக்கம் மேற்கொள்கிறவர்களுக்கு அறிவுரையாக இருக்க வேண்டுமென்று நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்.

முறை தவறி வாசிப்பழக்கம் மேற்கொள்கிறவர்கள் அநியாயமாக இறந்து போகிறார்கள். ஆசான் தயவில்லாமல் வாசிப்பழக்கம் மேற்கொள்கின்ற மக்கள் இறந்து போகின்ற காரணத்தினால், கனிவு கொண்டு இந்த செய்தி உலக மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதற்காக இந்தக் கருத்துகளை பேசிக் கொண்டிருக்கிறோம்.

**பேண அதிசார பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

முறை தவறி வாசிப்பழக்கம் மேற்கொண்டதால் வருகின்ற தீமைகள், அதனால் வருகின்ற துன்பங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம்.

தவறான வாசிப்பழக்கத்தால் உஷ்ணம் மிகுதியாகி, அபான வாயு மேல்நோக்கும். அதனால் மலச்சிக்கல் வரும். உள்கருவி கரணங்களின்

இயல்பறியாமல் வாசிப்பழக்கம் மேற்கொண்ட காரணத்தினால் சாப்பிட்ட உணவு ஜீரணிக்காமலே தொடர்ந்து பேதியாகும். இதனால் இறந்தவர் கோடி பேர் என்கிறார்.

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக்**
**கபாலமும் திறந்தனர் கோடி**
**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி**
**கலங்கினோர் அவர்ஒரு கோடி**
**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி**
**சொக்கினோர் அவர்ஒரு கோடி**
**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச்**
**சுரமதால் இறந்தனர் கோடி**
**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி**
**உள்ளடங் கிணர்களுங் கோடி**
**உயர சாண்நீள முழுவதும் எழும்பி**
**ஒங்கியே ஒடுங்கினோர் கோடி**
**பேண அதிசார பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

**– புலஸ்தியர் கற்பம் 300 – கவி எண் 97.**

இப்படியெல்லாம் அநேக கோடி மக்கள் இறந்திருக்கிறார்கள். நமக்கு கிடைத்த மனித வாழ்வு அற்புதமானது. பெறுதற்கரிய மானுட பிறவியைப் பெற்ற மக்கள் இப்படி தன்னை அழித்துக் கொள்ளக் கூடாது, மாய்த்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக மகான் புலத்தீசர் தனது பாடலில் இப்படி சொல்லியிருக்கிறார்.

**இனமறி யாமல் இருத்தியே வாய்வை**
**இறந்தனர் அவர்ஒரு கோடி**
**இனிய தம்பனஞ்செய்து எழும்பியே கும்பித்து**
**ஏங்கினோர் அவர்ஒரு கோடி**
**கனமறி யாமல் கரத்தை வாயுவினால்**
**கருதியே இறந்தனர் கோடி**
**கண்டு வாசியினில் ஒன்றைவிட்டு ஒன்று**
**கலங்கியே மடிந்தனர் கோடி**
**தினம்ஒரு நாழி வாசிகொண்டு இழுத்துச்**
**சிவபுரம் ஏகினோர் கோடி**

**தெளிந்திடும் கண்மூக்கு எனுமதைப் போற்றி**
**சிறந்தனர் அவர்ஒரு கோடி**
**தன்பெரு விரலால் அண்ணாக்கை ஏற்றித்**
**தயங்கினர் அவர்ஒரு கோடி**
**சலமதில் மூழ்கிச் சாதனை அதீதச்**
**சாக்காடுவந்து எய்தினோர் அறிந்தே.**

**– புலஸ்தியர் கற்பம் 300 – கவி எண் 98.**

**இனமறி யாமல் இருத்தியே வாய்வை இறந்தனர் அவர்ஒரு கோடி –** இனம் என்றால் அதனதன் தன்மையாகும். இன்னென்ன தன்மை கொண்டது இப்படித்தான் செயல்படும் என்பதாகும். வாசியின் தன்மையை அறியாது, முறை தவறி செய்த வாசிப்பழக்கத்தால் இறந்தவர் ஒரு கோடி என்கிறார்.

**இனிய தம்பனஞ்செய்து எழும்பியே கும்பித்து ஏங்கினோர் அவர்ஒரு கோடி –** தம்பனம் என்பது முறைப்படி செய்வதாகும்.

பத்மாசனம் இட்டு வீணாத்தண்டு நிமிர்ந்திருந்து வாசியை இழுத்து இப்படி நிறுத்து என்று ஆசான் சொல்வார். இதை மட்டும் கேட்டுக் கொண்டு இவன் பிராணாயாமம் செய்ய துவங்கிவிடுவான். காற்றை முறைப்படி நிறுத்தினால் ஆண்டு பத்துக்கு பிறகு அணுஅணுவாக அனல் ஏறிக் கொண்டே வரும்.

காற்று முறைப்படி முதலில் கீழிருந்து மேலே போக வேண்டும், பிறகு மேலேயிருந்து கீழே வர வேண்டும். ஆனால் ஆசான் தயவில்லாமல் இவனாகவே வாசிப்பழக்கம் மேற்கொள்வான். ஆசான் முறைப்படி சுட்டிக்காண்பித்த போதும், அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டுமென்று, ஆசானை கேட்டுகேட்டுத்தான் செய்ய வேண்டும்.

வயிற்றிலே உணவு இல்லாமல் இருக்கும்போது, பத்மாசனம் இட்டு வாசிப்பழக்கத்தை ஆசான் செய்ய சொல்வார். அதனால் ஓரளவுக்கு உடல் தாங்கும்.

ஆசானை கேட்டுகேட்டு செய்ய வேண்டிய விஷயத்தை, ஆசான் தயவில்லாமல் இவனாக வாசிப்பழக்கத்தை மேற்கொள்வான். இதனால் அவனுக்கு மரணம் வரும்.

**இனிய தம்பனஞ்செய்து எழும்பியே கும்பித்து ஏங்கினோர் அவர்ஒரு கோடி –** அந்தக் காற்று உச்சிக்கு வந்துவிடும். முதலில் கண்டஸ்தானத்திலிருந்து மேலே போவான். பிறகு உச்சியிலிருந்து கீழே வருவான். உந்திக்கமலத்தில் அடங்கிய காற்று பத்தாண்டுகளுக்குப் பிறகு மெதுவாக அனலேறி உச்சிக்கு வந்து முட்டும். பிறகு அந்தக் காற்றை ஆசான் துணை கொண்டு ஸ்தம்பித்து

நிறுத்தி ரேசித்து புருவமத்தியில் செலுத்தி கபாலத்தில் ஏற்றுவான். அப்படி கபாலத்தில் செலுத்தும்போது அமிழ்தபானம் சிந்தும். அதை எந்தளவிற்கு சாப்பிட வேண்டும்? அதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? என்பதற்கெல்லாம் ஒரு முறை இருக்கிறது. ஆசான் துணையில்லாமல் தவறான வாசிப்பழக்கம் மேற்கொண்டால் மரணம் வந்துவிடும்.

**கனமறி யாமல் கரத்தை வாயுவினால் கருதியே இறந்தனர் கோடி** – வாசியை மூக்குப்பக்கம் இழுப்பான். விடக்கூடாதென்று கெட்டியாகப் பிடித்துக் கொள்வான். காற்றை நிறுத்த முடியாது. அப்படியே ஸ்தம்பித்து நிறுத்திக் கொள்வான். உள்ளே அடைத்த காற்று அங்கும் இங்குமாக தடுமாறி, நாலாபக்கமும் திரும்பும். எந்த பக்கமாவது இலகுவான மிருதுவான வழி கிடைத்தால் அந்தப் பக்கம் வெளியே போக முயற்சிக்கும்.

**கனமறி யாமல் கரத்தை வாயுவினால் கருதியே இறந்தனர் கோடி –** கரம் என்றால் கை. மூச்சுக்காற்றை நன்றாக இழுத்து அடைத்துக் கொள்வான். உள்ளே அடைத்த காற்று அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்று வெளியேற பார்க்கும். கடைசியில் கண் பக்கமோ அல்லது காது பக்கமோ அடைத்த காற்று வெளியேறி இறந்து விடுவான்.

**கண்டு வாசியினில் ஒன்றைவிட்டு ஒன்று கலங்கியே மடிந்தனர் கோடி** – வாசியை இடது பக்கம் இழுத்து வலது பக்கம் விடுவான். இதுவும் பயனற்றது, இதனால் அவனுக்கு மரணம் வரும். தினந்தோறும் பிராணாயாமம் செய்து கொண்டிருப்பான், இதனால் தனக்கு மரணமில்லை என்று எண்ணிக் கொண்டிருப்பான். இதெல்லாம் பயனற்றது. இப்படியெல்லாம் ஒன்றைவிட்டு ஒன்று செய்து இறந்தனர் கோடி என்கிறார்.

**தினம்ஒரு நாழி வாசிகொண்டு இழுத்துச் சிவபுரம் ஏகினோர் கோடி** – மூச்சுக்காற்றை இழுத்து வாசியை கட்டுவான். முதலில் பத்து விநாடியில் ஆரம்பித்து அப்படியே படிப்படியாக அரை நிமிடம் ஒரு நிமிடம் என உயர்த்தி உயர்த்தி இருபத்துநான்கு நிமிடம் வாசியை நிறுத்துவான். இதற்குள்ளேயே அவனுக்கு மரணம் வர வாய்ப்புண்டு.

ஒரு நாளைக்கு இருபத்துநான்கு நிமிடம் மூச்சுக்காற்றை இழுத்து ஸ்தம்பித்து நிறுத்துவான். இப்படி செய்துவிட்டு மிகப்பெரிய காரியம் செய்துவிட்டதாக எண்ணுவான். கடலில் மூழ்கி முத்தெடுப்பவன், மூச்சடக்கி மூழ்கி முத்து எடுப்பான். அது பயிற்சியினால் வந்தது, பிறவித்துன்பத்தை ஒழிக்காது. அது பயிற்சிதானே தவிர, அதனால் பயன் ஒன்றுமில்லை. இப்படி மூச்சை கட்டுவதனால் எந்த பயனும் இல்லை.

உடலின் உஷ்ணத்தன்மையை அறியாமல், வாத, பித்த, சிலேத்துமத்தைப் பற்றி அறியாமல் வாசியை ஸ்தம்பித்து நிறுத்தினால் நோய் வந்து இறந்து போவான். இருபத்து நான்கு நிமிடம் வாசியை ஸ்தம்பித்து நிறுத்தினாலும் அவனுக்கும் மரணம் வரும். இதுவும் முறையில்லாத செயல். இதுபோன்று செயல்படுகின்ற மக்கள் இதையெல்லாம் அறிந்து கொண்டால் அவர்கள் வாழ்க்கைக்கு ஒரு பாதுகாப்பு இருக்கும். இனிமேலாவது சிறப்பான வாழ்க்கையை வாழ்வதற்கு துணையாக இருக்கும்.

**தெளிந்திடும் கண்மூக்கு எனுமதைப் போற்றி சிறந்தனர் அவர்ஒரு கோடி** – யோகிகள் வாசியை வசப்படுத்துவார்கள். தங்குகின்ற காற்று சிறிதுதான். உந்திக்கமலத்திற்கு பக்கத்தில், பின்புறத்திலே ஒரு சிறிய பை உண்டு. அங்கே தங்குகின்ற காற்று சிறியது. அது சுக்கிலம் உற்பத்தியாகின்ற இடம். அந்த இடத்திலே இந்தக் காற்று சென்று தங்கும்.

புருவமத்திக்கும் சுக்கிலம் உற்பத்தியாகின்ற இடத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு. இதை முறைப்படி செய்வதற்கு ஆசான் தூண்டுவார். இப்படி செய்வதால் காற்று அங்கே சென்று தங்கும். அங்கே தங்கிய காற்றை எழுப்புவதற்கு உபாயம், எந்தப் பாதையிலே அது செல்கிறதோ அந்தப் பாதையாகிய புருவமத்தியை உற்று நோக்குவதாகும். சிலபேர் கண் மூடி நிஷ்டை மேற்கொண்டு கூர்பார்வையை புருவமத்தியில் செலுத்துவார்கள்.

**அத்தாற் பிறவி யவரிரு கண்களை**
**வைத்தார் நுனிமூக் கின்புரு வத்திடை**
**நித்தார மங்கே நினைக்கவல் லார்க்கு**
**எத்தாலுஞ் சாவிலை இறையவ னாமே.**

**– மகான் திருமூலர் – ஞானக்குறி 30 – கவி எண் 5.**

**அத்தாற் பிறவி –** அன்றைய தேதி முதல் அவர் பிறவியை அற்றுவிட்டார். அற்றார் என்றால் பிறவியை அற்றுவிட்டார் என்பது பொருளாகும்.

**அவரிரு கண்களை வைத்தார் நுனிமூக்கின் புருவத்திடை –** சிலபேர் நுனி மூக்கு என்பதை தவறாக புரிந்து கொண்டு மூக்கின் நுனியை பார்ப்பார்கள். இங்கு நுனி மூக்கு என்பது புருவமத்தி ஆகும்.

**நித்தார மங்கே நினைக்கவல் லார்க்கு –** வாசி சென்ற வாசலில் கூர்பார்வை செலுத்தும்போது, உந்திக்கமலத்தில் தங்கிய காற்றுக்கு உஷ்ணம் மெல்லிய அளவிற்கு ஏறும். அப்படி உஷ்ணம் ஏறுவதால் அந்தக் காற்று உச்சிக்கு வரும்.

**தெளிந்திடும் கண்மூக்கு எனுமதைப் போற்றி சிறந்தனர் அவர்ஒரு கோடி** – சித்தி பெற்றவர்கள் கோடானுகோடி பேர். இதை அறியாமல் இறந்தவர்களும் இருக்கிறார்கள்.

இதை ஆசான்தான் சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் காற்றை மேலே கொண்டு வருவதற்கு, வாசி சென்ற வாசலில் கூர்பார்வை செலுத்த வேண்டும். இதுவே உற்ற துணையாக இருக்கும். கோடானு கோடி பேர் இப்படித்தான் சித்தி பெற்றிருக்கிறார்கள். இது சாகாத கல்வி. இதைப் பற்றி பேசுவதை கேட்டால், அது பல ஜென்மங்களுக்கு பயன்படும்.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

**– திருக்குறள் – கல்வி – குறள் எண் 398.**

இந்தக் கருத்துகளை கேட்டு வைத்தால், அடுத்த ஜென்மத்திலே தொட்டு பார்ப்பதற்கு உற்ற துணையாக இருக்கும். இல்லையென்றால் தொடவே முடியாது.

மெய்ப்பொருளை உணர்ந்த ஞானியர்களின் அருள் நமக்கு துணையாக இருக்க வேண்டும். இது போன்ற புனித வார்த்தைகளை கேட்டு வைப்பது நல்லது. இதெல்லாம் அருள்வாக்கு, வேதவாக்கு. இதை கேட்பதே நமக்கு பாவ விமோசனம்.

புண்ணியவான்களாகிய ஞானிகள் அருளிய நூல்களெல்லாம் மிக உயர்ந்தவை. பள்ளிக்கூடம் சென்று கற்ற கல்வியினால், இதெல்லாம் வரவில்லை. ஞானிகளெல்லாம் ஞானக்கல்வி கற்ற மக்கள். ஞானிகளெல்லாம் பல ஜென்மங்களிலே பாடுபட்ட மக்கள். பல கோடி ஆண்டுகள் பாடுபட்டதன் காரணமாக ஏற்பட்ட சிறப்பறிவைப் பெற்றவர்கள் ஞானிகள். இதையெல்லாம் நம்மால் தொட்டுப் பார்க்க முடியாது.

**தன்பெரு விரலால் அண்ணாக்கை ஏற்றித்**
**தயங்கினர் அவர்ஒரு கோடி**

அண்ணாக்கை ஏற்றுதல் என்பது பரிபாஷை. இதை அறியாது தன் விரலால் அண்ணாக்கை ஏற்றுவான். ஆனால் நாங்கள் எங்களுடைய நாக்கை கொண்டு உள்நாக்கை தொடுவோம். வாசிவசப்பட்டதும் நாக்கு ஒரு அங்குலம் முன்னே வரும். இந்த நாக்கை கொண்டு உள்நாக்கை தடவுவோம். இது வாசி வசப்பட்ட மக்களுடைய அடையாளங்கள். இவன் நாக்கை விரல் கொண்டு இழுத்து தொட முயற்சிப்பான். இப்படி கையால் செய்ய வேண்டியதில்லை, இயல்பாக வர வேண்டிய ஒன்று. இது கைகூடுவதற்கு எத்தனை ஆண்டுகள் பூஜை செய்திருக்க வேண்டும். விரைவாக அடைய வேண்டுமென்பதற்காக நாக்கை தடவி தடவி கீழே இழுக்க பார்ப்பான். ஆனால் ஏமாந்து போவான். இதுவும் தவறான வழி.

**சலமதில் மூழ்கிச் சாதனை அதீதச்**
**சாக்காடுவந்து எய்தினோர் அறிந்தே.**

தண்ணீரில் மூழ்கி மூச்சடக்கி சாதனை செய்ய முயற்சிப்பான். தண்ணீரில் மூழ்கி சாதனை மேற்கொண்டார், பிறகு தண்ணீரை விட்டு வரவேயில்லை. தண்ணீரில் மூழ்கியவர் அப்படியே இறந்துவிட்டார் என்று அவரைப் பற்றி உலகத்தவர் பேசிக்கொள்வார்கள். இப்படி இறந்தவர்கள் ஒரு கோடியல்ல பலகோடி பேர்.

மென்மையாக செய்ய வேண்டிய ஒன்றை, விஷயம் புரியாமல் தவறாக செய்வதால் இறந்தவர்கள் கோடானுகோடி பேர்.

வாசியைப் பற்றி அறியாமல் நெறிகடந்து, வாசியின் தன்மையைப் பற்றி அறியாமல், முறையறியாது வாசிப்பயிற்சியை செய்து கிடைத்தற்கரிய மானுடப்பிறவியை வீணடித்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் இந்தத் துறைக்கு வந்தவுடனே யான் என்ற கர்வம் வந்துவிடும். எனக்கு எல்லாமே தெரியும் ஆசான் தேவையில்லை என்பான். இவனுடைய அறிவின் ஆற்றல் ஒரு பங்கு என்றால், ஆசானின் அறிவு ஆயிரம் பங்கு உயர்ந்தது. ஆயிரம் பங்கு அறிவில் சிறந்து விளங்கினால் மட்டுமே, இந்தத் துறையில் முன்னேற முடியும். ஒரு பங்கு அறிவைக் கொண்டு முன்னேற முடியாது. ஆனால் இவன் எனக்கு எல்லாம் தெரியும் என்பான். இது அவன் செய்த வினைப்பயன்.

சிலபேர் அவரவர் அறிந்த பொருளே, உண்மைப் பொருளென்று மயங்கி இருப்பார்கள். அவர்களிடமும் சில சீடர்கள் இருப்பார்கள். நமது ஆசான் உயர்ந்த அறிவுள்ளவன் என்று எண்ணியிருப்பார்கள். அவனுடைய தோற்றத்தைக் கண்டு உண்மையான ஆசான் என்று அந்த சீடன் நம்பி இருப்பான். அவன் சொல்லுகின்றதையெல்லாம் சீடன் கேட்டுக் கொண்டிருப்பான். ஆசான் உண்மைப் பொருளைப் பற்றித்தான் பேசுகிறாரா என்பதை அறிகின்ற ஆற்றல் சீடனுக்கு இருக்காது. சீடனுக்கு அந்த அறிவு இருக்குமேயானால் அவன் அங்கே இருக்க மாட்டான்.

சிலபேர் பொதுமக்களிடையே பிரபலமடைவார்கள், புகழ் ஏற்படும். அவனுடைய தோற்றமும் சாதுவாக இருக்கும். சாது போல வேடமணிந்து இருப்பான். பொதுமக்களிடையே புகழ் ஏற்படும். சீடர்களும் மிகுதியாக இருப்பார்கள். தாங்கள் எப்போது சமாதியாக போகிறீர்கள் என்று சீடர்கள் கேட்பார்கள். அப்பொழுதுதான் இவனுக்கு ஊழ்வினை வந்து உறுத்தப் போகிறது, இவன் சாகப் போகிறான் என்று அர்த்தம்.

பன்னிரண்டு வருடமாக இவனிடம் தொண்டு செய்கிறோமே? இவன் ஏதாவது சொல்லிக் கொடுத்தானா? இவனை சாகடிக்க வேண்டுமென்று தாங்கள் எப்பொழுது சமாதியாகப் போகிறீர்கள் என்று சீடன் கேட்பான். சமாதி என்பதன் அர்த்தம் சீடனுக்கு தெரியாது. பிரபல்யம் ஆனவர்கள் சமாதி அடைய ஆசைப்படுவார்கள். ஆனால் அது தற்கொலைக்கு சமம்.

**அறிவது இவ்வாறின் கருத்தினை இயம்ப**
**அவணியின் மாந்தருள் சிலபேர்**
**அம்புவி தனிலே மறையவும் குழிசெய்து**
**அதனிலும் பதுங்கினோர் கோடி**
**சரிந்திடு கதலி வாழையின் குழைபோல்**
**தத்தளித்தன அவை போலும்**
**தயங்கினர் அனேகர் சாகர மதனில்**
**தாம்விழுந்து அலைவது போலும்**
**தரணியிற் சிலபேர் தாமரை யிலைதண்**
**ணீரெனத் தவித்தன ரப்பா**
**பாருலக அதீதம் தேடியும் குருவின்**
**பதமடை யாமலும் மாண்டார்**
**தெரிந்தும் இப்பரிசே உத்தமர் அனேகர்**
**தெளிந்தவர் அறிந்துமே செப்பச்**
**சீறிடும் வாசி யோகத்தின் பெருமை**
**திருத்தமாய் உரைத்திட லாமே.**

**– புலஸ்தியர் கற்பம் 300 – கவி எண் 99.**

**அறிவது இவ்வாறின் கருத்தினை இயம்ப அவணியின் மாந்தருள் சிலபேர் –** வாழ வேண்டுமென்று ஆசைப்படுபவன் இந்தக் காரியத்தை செய்ய மாட்டான். மிகுதியாக பாவம் செய்தவன்தான் இந்தக் காரியத்தை செய்வான். பூமியிலே வைத்து என்னை சமாதி செய்யுங்கள் என்று சொல்வான். பூமியிலே குழி தோண்டி சிறிய அறை போல அமைத்து சமாதிக்கு ஏற்பாடு செய்வார்கள். அதில் அவன் அமர்ந்து கொள்ள, சீடர்களெல்லாம் மேலே இருந்து கல்லை வைத்து மூடி, சிமெண்ட் கலவையை கொண்டு பூசி அடைத்துவிடுவார்கள். பிறகு மூச்சுவிட முடியாமல், மூச்சுத்திணறி இறந்து போவான். இப்படி முறை அறியாமல் இறந்தனர் பல கோடி என்கிறார்.

சமாதிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட குழிக்குள்ளே யோகத்தண்டு, திருவிளக்கு, ஒரு செம்பு தண்ணீர், விபூதி, கற்பூரம், ஊதுபத்தி போன்றவற்றை வைத்து கொண்டு பத்மாசனமிட்டு அமர்ந்து கொள்வான். சாமி, சமாதி ஆகப் போகிறார் என்று அங்கே இருக்கின்ற சீடர்களெல்லாம் பெருமையாக சொல்வார்கள். சாமி சாகப்போகிறார் என்பது அவர்களுக்கு தெரியாது.

சாமி உள்ளே அமர்ந்து கொள்ள, கல்லை வைத்து மூடிவிடுவார்கள். பத்து பதினைந்து நிமிடத்திற்குள்ளே மூச்சு விடமுடியாமல் சித்திரவதைப்பட்டு சாவான். ஏனென்றால் பொதுமக்களுக்கு தவறான பாதையைக் காட்டியதால், பொதுமக்களின் பாவத்தை வாங்கிக் கொண்டதால், இவனுக்கு இதுதான் சரியான தண்டனை என்று உண்மைப் பொருளை அறிந்தவர்கள் சொல்வார்கள். இப்படி அநியாயமாக இறந்து போவான்.

உண்மையை தெரிந்து கொண்டு பேச வேண்டும். இல்லையென்றால் அமைதியாக இருக்க வேண்டும்.

பக்தி நெறியைப் பற்றி பேசுகின்றவனுக்கு எந்தக் காலத்திலும் குற்றமில்லை. பக்திநெறியைப் பற்றி பேசினால், சித்திதான் ஏற்படும். அதனால் தீமை ஒன்றும் ஏற்படாது.

ஆனால் யோகத்தை மட்டும் தெரிந்து கொண்டு செய்ய வேண்டும். இல்லையென்றால் தனது வாழ்நாளை பறிகொடுத்து விடுவார்கள். விரைவில் நோய்வாய்ப்பட்டு இறந்து போவார்கள். அதனால் பெரும் பாவத்திற்கு உள்ளாவார்கள். இவன் சொல்லிக் கொடுப்பதால் சீடன் நோய்வாய்ப்படுகிறான். அதனால் இவன் கடைசி காலத்தில் சமாதி ஆகிறேன் என்று மூச்சுமுட்டி இறந்து போவான். இப்படிதான் இவன் சாகடிக்கப்படுகிறான். இவன் அறிவைக் கொண்டே, இவனுடைய செயலைக் கொண்டே இவன் சாகிறான். இப்படி இறந்தவர்கள் ஒரு கோடி பேர்.

**அறிவது இவ்வாறின் கருத்தினை இயம்ப**
**அவணியின் மாந்தருள் சிலபேர்**
**அம்புவி தனிலே மறையவும் குழிசெய்து**
**அதனிலும் பதுங்கினோர் கோடி**

இப்படி கோடானுகோடி மக்கள் இறந்திருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ மக்கள் சாகப்போகிறார்கள். இவர்களெல்லாம் பாவி என்று முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்.

**சரிந்திடு கதலி வாழையின் குழைபோல்**
**தத்தளித்தன அவை போலும்**
**தயங்கினர் அனேகர் சாகர மதனில்**
**தாம்விழுந்து அலைவது போலும்**
**தரணியிற் சிலபேர் தாமரை யிலைதண்**
**ணீரெனத் தவித்தன ரப்பா**

இவனெல்லாம் உண்மைப் பொருளை அறியாதவன். இப்படியெல்லாம் மக்கள் சாகிறார்களே என்று வருத்தப்படுகிறார்.

வாழைமரம் தார் போடுவதற்கு முன்னே வாழைப்பூ வரும், பிறகு வாழைப் பிஞ்சு வைக்கும். பிஞ்சாக இருக்கும்போதும் பகையில்லை, பூவாக இருக்கும்போதும் பகையில்லை. சிறிது சிறிதாக பிஞ்சு பெருத்து காயாகும். பிறகு காய் பழுக்க ஆரம்பிக்கும். வாழை தாரில் நுனி கூர்மையாக இருக்கும், அடி பெருத்திருக்கும். வாழைத்தார் சுமார் அறுபது கிலோ எடையிருக்கும். வாழைத்தாரின் எடை தாங்காமல் வாழைமரம் ஆட்டம் காணும்.

அந்த வாழைமரம், தான் ஈன்ற வாழைத்தாரால் அல்லல்படுகிறது. ஆகவே வாழைமரத்திற்கு பகை, தான் ஈன்ற தாரே ஆகும். அதுபோன்று இவன் செய்கையே இவனுக்கு தீமையை உண்டாக்கும்.

வாழை மரம் தார் போடும் முன்பு வரை செழிப்பாக இருக்கும், வாழைத்தார் பெருக்க பெருக்க மரம் தாங்காமல் வளையும். அப்பொழுது விவசாயிகள் அந்த வாழை மரத்திற்கு முட்டுக் கொடுப்பார்கள், மரம் ஒடியாமல் இருக்க முட்டுக் கொடுப்பார்கள். அந்த தார் நன்றாக பெருத்து விளைய வேண்டுமென்பதற்காக மரத்திற்கு முட்டுக் கொடுக்கிறான். வாழை மரத்தின் மீது கருணை கொண்டு முட்டுக் கொடுப்பதாக யாரும் எண்ணாதீர்கள்.

விவசாயி தான் இட்ட உரத்திற்கும், பாய்ச்சிய தண்ணீருக்கும், வாழைத்தார் வீணாக போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் மரத்திற்கு முட்டுக் கொடுக்கிறான்.

உண்மைப் பொருளை அறிந்த ஆசான் பாதத்தைப் பற்றினால், அவர் சீடனுக்கு முட்டுக் கொடுப்பார். தவறு நடந்துவிட்டது அஞ்சேல் மகனே என்று ஆசான் முட்டுக் கொடுப்பார். இல்லையென்றால் வாழைமரத்திற்கு ஏற்படும் கதிதான், இவனுக்கும் ஏற்படும்.

**சரிந்திடு கதலி வாழையின் குழைபோல்**
**தத்தளித்தன அவை போலும்**
**தயங்கினர் அனேகர் சாகர மதனில்**
**தாம்விழுந்து அலைவது போலும்**
**தரணியிற் சிலபேர் தாமரை யிலைதண்**
**ணீரெனத் தவித்தன ரப்பா**

இப்படியெல்லாம் தாமரை இலை போல தவித்த மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார். வாழைமரத்திற்கு விவசாயி எப்படி பாதுகாப்போ, அதுபோன்று உண்மைப் பொருளறிந்த ஆசான் பாதத்தைப் பற்றினால் அவர் நமக்கு பாதுகாப்பு தருவார்.

பிராணாயாமம் என்று சொல்லப்பட்ட இரகசியத்தை ஆசான் சுட்டிக்காட்டினால் அன்றி தொட்டுப் பார்க்கக் கூடாது. ஆசான் தொட்டுக் காட்ட வேண்டும், இல்லையென்றால் சுட்டுப்போட்டாலும் வராது. இந்த கருத்து சமுதாயத்திற்கு பரவ வேண்டும்.

**பாருலக அதீதம் தேடியும் குருவின் பதமடை யாமலும் மாண்டார்** – அதீதம் தேடி என்கிறார். ஆசானை தேடி அலைவார்கள். பல இடங்களிலே நாளுக்கு நாள் சுற்றுவார்கள். உண்மைப் பொருளறிந்த ஆசான் கிடைக்கமாட்டான். அங்கே காரிய குரு தான் இருப்பான், காரண குரு இருக்க மாட்டார்.

காரண குரு என்பவர் பையையும் பார்க்க மாட்டார், கையையும் பார்க்க மாட்டார், மெய்யை மட்டுமே பார்ப்பார். மெய் என்றால் உண்மைப் பொருள். அவர்கள் பிரதிபலன் எதிர்பார்க்க மாட்டார்கள்.

**கணைகொடிது; யாழ்கோடு செவ்விது;ஆங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்.**

**– திருக்குறள் – கூடா ஒழுக்கம் – குறள் எண் 279.**

அவர்களுடைய செயல்களை பார்த்துதான் உண்மைப் பொருளை தெரிந்து கொள்ள வேண்டும். பண்புள்ள மக்கள், உற்ற ஆசானை தேடி அலைவார்கள். நாமாக வாசிப்பழக்கம் மேற்கொண்டால் நோய் வந்துவிடுகிறதே, அதனால் ஆபத்து வந்துவிடுகிறதே, எங்கேதான் இருப்பார் நமக்கு புரியவில்லையே என்று அலைவான். ஒன்றுமே புரியவில்லையே யாராவது நமக்கு கிடைப்பானா கிடைப்பானா என்று ஊரெல்லாம் சுற்றுவான்.

உண்மைப் பொருளை அறிந்த ஆசான் என்று நம்பி, அவனிடம் சீடனாக இருப்பான். ஆனால் அவன் மடமையுள்ள ஆசானாக இருப்பான். திடமுள்ள ஆசானைதான் தேட வேண்டும். மடமையுள்ள ஆசானை தேடக் கூடாது.

உண்மைப்பொருளை அறிந்த ஆசான் அகத்தீசர் திருவடியைப் பற்றி, நம்பிக்கையுடன் பூஜை செய்ய வேண்டும்.

உண்மைப் பொருளை அறிய ஆசான் அகத்தீசர், ஆசான் இராமலிங்கசுவாமிகள், மகான் கருவூர்முனிவர், மகான் புஜண்டமகரிஷி, மகான் கஞ்சமலைச்சித்தர், மகான் சிவவாக்கியர் போன்ற ஞானிகளை பூஜை செய்ய வேண்டும். அடியேனுக்கு ஞானம் சித்திக்க வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். நீரே ஆசானாக இருந்து எனக்கு அருள் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்ள வேண்டும். இப்படி கேட்பதால் ஆசான் அகத்தீசரை பூஜை செய்து வேண்டினால், உனக்கு உண்மைப் பொருளறிந்த ஆசான் கிடைப்பார்.

காரிய குரு என்பவன் பொருளாதாரத்தைப் பற்றியே சிந்திப்பான், பொருளாதாரத்தைப் பற்றியே பேசுவான். இவன்தான் காரிய குரு. இவன் ஏகப்பட்ட மக்களின் வாழ்க்கையை பாழ்படுத்துவான்.

உண்மைப் பொருளறிந்தவன் ஆசானைத் தேடி, ஆன்ம பசியோடு அலைகிறான், பக்தி நாட்டமுள்ளவனாக இருக்கிறான்.

மெய்ப்பொருளை அறிய வேண்டுமென ஆசையுள்ள மக்களிடம், இவன் உனக்கு இன்று முதல் சகலமும் சித்தித்துவிட்டது. இன்று முதல் நீ தேவனாகிவிட்டாய் என்கிறான். அவன் தினமும் பூஜை செய்வதை விட்டுவிட்டு இன்று முதல் நான் தேவன். எனவே பூஜை செய்ய தேவையில்லை என்று நினைக்கிறான். இதனால் அவன் நரகத்திற்கு போக வேண்டிய சூழ்நிலை வரும்.

இந்தத் துறை தினமும் பாடுபட வேண்டியது. தினமும் விடாது பூஜை செய்ய வேண்டும். காலை எழுந்து காலைக்கடன்களை முடித்து குளித்து விட்டு, ஒரு வெண்ணிறத் துணி விரித்து அதில் அமர்ந்து திருவிளக்கேற்றி ஊதுபத்தி வைத்து ஆசான் நாமத்தை ஓம் அகத்தீசாய நம என்று நூற்றியெட்டு முறை சொல்லி பூஜை செய்ய வேண்டும்.

பூஜாவிதியைத்தான் இனிமேல் நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து சொல்லப் போகிறோம். பூஜா விதியைப் பற்றியும், பூஜை செய்கிற முறையையும் சொல்லிக் கொடுத்து பூஜை செய்ய பயிற்சி கொடுக்க வேண்டும். இப்படி பயிற்சி கொடுத்துதான், இங்கே வருகின்றவர்களை கடைத்தேற்ற வேண்டும். இப்படி சொல்லிக் கொடுக்கின்ற நாங்கள் காரண குரு.

காரிய குரு என்பவன் பொருளாதாரத்தை மையமாக கொண்டு செயல்படுவான், பூஜாவிதியைப் பற்றி பேச மாட்டான், எடுத்தவுடனே பணத்தை வாங்கிக் கொண்டு யோகத்தை சொல்லிக் கொடுப்பான். அவன்தான் காரிய குரு.

**தரணியிற் சிலபேர் தாமரை யிலைதண்**
**ணீரெனத் தவித்தன ரப்பா**
**பாருலக அதீதம் தேடியும் குருவின்**
**பதமடை யாமலும் மாண்டார்**

குரு சுட்டிக்காட்ட வேண்டிய முறை இதுதான்.

**தெரிந்தும் இப்பரிசே உத்தமர் அனேகர்**
**தெளிந்தவர் அறிந்துமே செப்பச்**
**சீறிடும் வாசி யோகத்தின் பெருமை**
**திருத்தமாய் உரைத்திட லாமே.**

இப்படியெல்லாம் தவறான வாசிப்பழக்கம் செய்து இறந்த மக்கள் பல கோடி என்கிறார்.

**தெரிந்தும் இப்பரிசே** என்பது வகை என்று அர்த்தம். வாசியின் வகை தொகை அறிந்து இப்படி செய் என்று ஆசான் சுட்டிக்காட்டுவார். ஆசான் எவருக்கு சுட்டிக் காட்டுகிறாரோ, அந்த நேரமே அவன் மரணமில்லாப் பெருவாழ்வை பெறப் போகிறான் என்று அர்த்தம்.

**யோகத்தின் பெருமை திருத்தமாய் உரைத்திட லாமே** – இதை அறிந்தவர்கள்தான் அந்த இரகசியத்தை சொல்வார்கள். யாரும் குருவை தேடி அலைய வேண்டாம். மகான் அகத்தீசர், மகான் கருவூர்முனிவர், மகான் திருமூலதேவர், மகான் புஜண்டமகரிஷி போன்ற ஞானிகள்தான் நமக்கு ஆசான். இவர்களெல்லாம் மாபெரும் யோகி.

எல்லாம்வல்ல ஞானியர்களை வணங்கி நாமஜெபமாகிய பூஜை செய்து, நீங்கள் விரும்பியது எதை வேண்டுமானாலும் கேட்கலாம். இல்லற வாழ்க்கை சிறக்கவும், துறவற வாழ்க்கை சிறக்கவும் கேட்கலாம், வாசி வசப்பட வேண்டுமென்றும் கேட்கலாம். ஆசான் அகத்தீசர் முதல் அவர் வழிவந்த அனைத்து ஞானிகளும் மனிதர்களாக பிறந்து நம்மைப் போன்று வாழ்ந்தவர்கள்தான். ஞானிகள் அனைவரும் சுக்கிலசுரோணித சேர்க்கையால் பிறந்தவர்கள்தான். தலைவனை வணங்கி அரும்பெரும் முயற்சிகளால் ஞானிகளாக ஆனார்கள். இவர்களுடைய பாதத்தைப் பற்றி நாமஜெபம் செய்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன் வணக்கம்.

–சுபம்–

## முருகன் திருவடி வாழ்க

## துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)
2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).
3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).
4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).
5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளிய

## ஞானக்கவிகள்

21) மறைபோற்றும் திருஞான சம்பந்தன் மலரடி போற்றிட
நிறைவான வாழ்வு இன்பமும் நல்குமே.

22) அப்பா அருணகிரி அரங்கன்தான் செய்யும் தர்மம்
தப்பாது பிறவிதனை ஒழிக்குமே.

23) அன்னையாம் அகத்தீசன் அடியினை போற்றிட
முன்னை நாம் செய்த பாவம் முற்றிலும் ஒழியுமே.

24) வள்ளலார் திருவடியை வழிபாடு செய்திட
நல்லதொரு ஞானவாழ்வு நமக்கே நல்குவார்.

25) வேலவா என்றே வேண்டி அழைத்திட
ஞாலத்தை ஆள நமக்கே அருளுவார்.

26) காலத்தை வென்ற கந்தவேலனே
ஞாலத்தை ஆள நமக்கே அருளுவான்.

27) ஆட்சி இந்த வேலவன் அடியினை போற்றிட
மூச்சற்ற காலனும் முற்றிலும் அழிவனே.

28) வந்தனன் வேலவன் வணங்கியே போற்றிடேல்
தந்தனன் எனக்கே வாசி நடத்தி.

29) பற்றற்ற முருகனின் பாதம் பணிந்திட்டால்
பற்றற்ற வாழ்வும் பரவாழ்வும் சித்திக்கும்.

30) முற்றும் உணர்ந்த முருகன் திருவடியை பற்றுவதே
கல்வியின் பயனென்று அறியலாம்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும். இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

# மகான் சுப்பிரமணியர் அருளிய ஞானஅறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : **99655 71837**

1. பசிபிணி விரட்டி இந்த கலியுகத்தில்
பரோபகாரம் எனும் சக்தியை பெருக்கி மக்களை காத்தருளும்
கனிவு கொண்ட ஆறுமுக அரங்கமகா ஞானியே
கருணை கொண்டு சுப்பிரமணியர் யானும் இனிதே

2. இனிதே அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
இயம்பிடுவேன் சார்வரி தேள் திங்கள் தன்னில்
துணிவுபட அரங்கன் தர்மம் உலகை மாற்றும்
தூய்மையான அரங்கன் சன்மார்க்க கொள்கை இந்த உலகையே வெல்லும்

3. வெல்லுகின்ற மகத்துவம் மிக்க அரங்க ஞானி
வேற்றுமை இல்லாத சமத்துவம் மிக்க அரங்கன் தர்மம்
வல்லமைபட கலியுகம் எங்கும் வலம் வந்து
வரலாறு படைக்கும் ஞானயுக மாற்றமாக

4. ஆகவே அரங்கனை தேடி உலகமக்கள்
ஆற்றல் பெருக்கம் கொள்ள வேண்டி இனிதே
வகைபட வல்லமைபட தொடர்ந்து வர
வையகம் சடுதி பேரழிவில் இருந்து மீளும்

5. மீளுமப்பா பிரளயம் போன்ற கடுமையான சிக்கல் அணுகாத வண்ணம்
மண்ணுலகமே பாதுகாப்பும் இயற்கையின் பலமோடு
ஆற்றல்பட தர்மஞான சக்திகள் பெருகி
அகிலமே அரங்கன் அமைக்கவுள்ள ஞானயுகமாக மாறும்

6. மாறுதலும் மக்களுக்கு நல்ல தேறுதலும்
மகத்துவம்மிக்க உண்மை ஞான தர்மபலம்
ஆறுமுக அரங்கனால் மட்டுமே கலியில் நடந்தேறும்
அற்புதத்தை கண்டு வணங்கி கலியுக மக்கள் எல்லாம்

7. மக்கள் எல்லாம் அரங்கனை தொடர்ந்து வந்தால்தான்
மாற்றமும் நல்ல தேற்றமும் உங்கள் உலகோர்க்கு கண்டு
ஆக்கமுடன் சடுதி ஞானயுக மாற்றம்
அரங்கனால் அற்புதம்பட நடந்தேறும்

8. நடந்தேறவே அரங்கனுக்குள் யான்
நாளும் நாளும் சக்தியூட்டி வர
இடரின்றி அரங்கனை வணங்கி வாரீர்
இந்த உலகில் பெருமாற்றம் கண்டு பாதுகாப்பு பெறுவீர்
ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே!

பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!

ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்
மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

நமது ஓங்காரக்குடில் சார்பாக தொடர்ந்து 44 வருடங்களாக அன்னதானம் நடைபெறுகிறது. தற்போது, நச்சுக்கிருமி மற்றும் இயற்கை சீற்றங்கள் வராது இருக்க, நமது ஓங்காரக்குடில் சார்பாக அன்னதானம் நடைபெறுகிறது. இந்த அன்னதானத்திற்கு பொருளுதவி செய்ய விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

A/C Name : SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST
**A/C NO : 911010045586268**
**Bank : Axis Bank**
**Branch : Thuraiyur.621010**
**IFS Code : UTIB0001272**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

உலக மாற்றம் எப்பொழுது நிகழக்கூடும், இந்த உலக மாற்றத்தில்
ஓங்காரக்குடிலின் பங்கு என்ன, ஓங்காரக்குடில் தொண்டர்களின்
செயல்பாடுகள் என்ன என்பது குறித்த

# மகான் சுப்பிரமணியரின் அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. ஆறுமுக சக்தியே எந்தன் அவதாரமே
அகிலத்தை காக்க வந்த மாதவராஜனே
ஏறுமுகம் உன்னால் உலகமே பெறும் எனக்கூறி
ஏழாம்படை வீட்டின் சக்தி இந்த உலகம் ஏற்கப்படும் என்றுகூறி

2. கூறியே சுப்பிரமணியர் யானும் இனிதே
குருராஜன் அரங்கன் கேட்க உலகமாற்றம் குறித்தும்
பெருமைமிக்க இந்த உலக மாற்றத்தில்
பேராசான் அரங்கரின் ஓங்காரக்குடிலின் பங்கு என்ன

3. இதனோடு ஓங்காரக்குடிலின் உயர் சீடர்களின் பங்கு என்ன என்பது குறித்த
உயர்வான அறிவுரை ஆசி தன்னை சுப்பிரமணியர் யானும் இனிதே
களங்கமற அரங்க ஞானி கேட்க அருளுவேன்
கலியுகத்தின் காப்பு தடமே ஓங்காரக்குடிலாகும்

4. ஆகவே என்அவதாரமாக வந்த அரங்கனே
அகிலத்தின் அனைத்து மகாசக்திகளும் ஏற்று
கனிவு கொண்டு அரங்கனோடு
கலந்து அற்புதம் நிகழ்த்தி வர

5. வருகின்ற அரங்க ஞானி குடிலால்தான்
வையகம் பெருமாற்றம் பெறக்கூடும்
தருகின்ற அரங்கன் தர்மத்தால்தான்
தமிழகம் இந்தியா இந்த பேருலகமே பாதுகாப்பை பெறும்

6. காப்பு பெற அற்புதமான சன்மார்க்க வழிநடத்தி
கருணையை முதலீடாக செய்துகொண்டு அரங்கன்
ஒப்பு கொண்டு உலகமக்கள் எல்லாம் ஒன்று
ஒப்பு கொண்டு வர இந்தஉலகமே ஒரு குடையின் கீழ்

7. ஒரு குடையின் கீழ் ஞானஆட்சியாகவும்
உயர்வான ஞானயுகமாகவும் மாற்றம் பெறக்கூடும்
மாட்சிமைபட இந்த மாற்றம் செய்தே தீருவேன்என
மகத்துவமோடு அரங்கன் ஆற்றலாய் அவதரிப்பு நிகழ்த்தி இருக்க

8. இருக்கின்ற அரங்கன் வழிகாட்டலிலேயே
இந்த உலகம் சடுதி பெருமாற்றம் காணும்
கருத்தாக அரங்கன் சக்திமிகுந்த ஓங்காரக்குடில்
கருணையும் ஜீவதயவும் அளவில்லாத மாதர்மமும் இங்கணமே
ஆக்கமாக பெருகி வரவர இந்த உலகம் தர்மபலம் கூடி மாறுதல் காணும்

9. காணவே ஓங்காரக்குடிலின் பங்கு
கருணை வடிவாக மாறி உலகமெங்கும் பரவிவர
தேக்கமின்றி ஓங்காரக்குடில் தொடர்பு கொண்டவர்கள்
தேசிகனை குருவாக ஏற்று சீடர்களான மக்களும்

10. மக்கள் எல்லாம் உலகமெங்கும் பரவி பரவி
மகத்துவத்தை அறிந்து உணர்ந்து தெளிந்து
தேக்கமின்றி இந்த கொள்கையை வளர்க்க உயர
தேசமெல்லாம் தர்மத்தை பரப்ப பரப்பவே இந்த பேருலக மாற்றம்
ஞானயுக மாற்றமாக சடுதி காணக்கூடும்

11. கூடவே அற்புதத்தை குறையில்லா
அரங்க ஞானி ஆற்றலாக ஏற்பு கொண்டு
உலக சக்திகளும் வழிநடத்த
ஏழாம்படை வீடான ஓங்காரக்குடிலின் சக்தி மூலம்

12. சக்தியின் சர்வசூட்சமமாக இயங்குகின்ற ஆறுமுக அரங்கஞானி அருள் மூலம்
சடாட்சர சக்தியாக நிரம்பி வழிநடத்தி வருகின்ற
ஆறுமுக அரங்கஞானி வழிகாட்டலின் மூலம்
அருள் பெற்ற அனைத்து சீடர்களின் தொண்டு மூலமாக

13. ஆகவே இந்த கலியுகம் மாற்றம்தனை
அற்புதம்பட ஞானயுக மாற்றமாக
ஏற்பு கொண்டு பேருலக மாற்றமாக
இனிதே வருகின்ற தமிழ் புத்தாண்டு காலம்தொட்டு அற்புதங்கள் நடக்கக்கூடும்

14. கூடவே அய்யமற குவலயத்தார்
அமைதிபட நடந்து வருகவருக
ஈடேறி உலகமாற்றம் காணும்
இனிதே ஞானயுக மாற்றமாக வாழுகின்ற ஞானி அரங்கன் மூலம்

15. மூலமதில் சடுதி நடந்தேறும்
முழுமை ஞானயுகமாக மாற்றம் பெறும்
வழுவாது தொடர்ந்து வாரீர் வாரீர் என
வரவேற்று வாழ்த்தி வையகத்தாரை சுப்பிரமணியப் பெருமான் யானும்
ஓங்காரக்குடில் நோக்கி அழைக்கும் விதமாக இந்த அறிவுரை
ஆசி தந்துள்ளேன் அறிவுரை ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

முருகப்பெருமான் எமது சக்தி வடிவமாக வந்துதித்த அரங்கமகானே, உம்மால் இந்த உலகம் முன்னேறும் அப்பா. ஏழாம் படை வீட்டின் சக்தியை இவ்வுலகம் ஏற்றுக் கொள்ளுமப்பா. அரங்கா தாம் உலக மாற்றம் குறித்தும் அதில் உமது தொண்டர்கள் பங்கு குறித்தும் ஓங்காரக்குடிலின் செயல்பாடு குறித்தும் எம்மை கேட்க, முருகப்பெருமான் யானும் உமக்கு ஆசி அறிவுரை வழங்கி நிற்பேன் எனக் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

இந்த கலியுகத்தை காக்கவல்ல சக்திமிக்க ஞானபீடமே ஓங்காரக்குடில். எமது அவதாரமே அரங்கமகானே உம்மை உலக மகா சக்திகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டு அரங்கருடன் கலந்து அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றதினால், அரங்கரின் ஓங்காரக்குடில் மூலமாகத்தான் உலகம் பெருமாற்றம் அடைய முடியும். அரங்கரின் தர்மத்தால்தான் தமிழகமும் இந்தியாவும் உலகமும் பாதுகாப்பை பெறக் கூடும். உலக மக்கள் சன்மார்க்க நெறியினை ஏற்று தயவை மூலதனமாகக் கொண்டு ஒன்றுகூடி, அரங்கமகானை முருகப்பெருமானின் அவதாரமாக ஒப்புக் கொண்டு பின்தொடர உலகம் முழுதும் ஞானஆட்சி மலரும். அதுவே ஞானயுகமாக மாறிடும்.

துன்பம்மிக்க கலியுகத்தை மாற்றியே தீருவேன் என வைராக்கியமாய் அரங்கர் வல்லமையுடன் அவதாரம் செய்திருப்பதினாலே அரங்கரை பின்தொடர உலக மாற்றம் உண்டாகும். ஓங்காரக்குடிலின் தர்மமே ஆக்கசக்தியாக மாறி ஓங்காரக்குடில் மூலமாக மாற்றம் அடையும். ஆதலினாலே அரங்கரை குருவாய் ஏற்றுக் கொண்ட தொண்டர்களும் இணைந்து உலகமெலாம் தர்மத்தைப் பரப்பி வளரச் செய்யசெய்ய, உலக சக்திகள் வழிநடத்த ஓங்காரக்குடில் சக்தியினால் அரங்கரின் அளவிலா ஆற்றலினால் அரங்கரின் சீடர்களின் அற்புதமான தொண்டுகளால் உலகம் மாற்றம் அடையும்.

வருகின்ற தமிழ் புத்தாண்டாகிய பிலவ வருடத்திலிருந்து உலகினில் அற்புதங்கள் அரங்கமகானால் ஞானிகள் துணையுடன் நடக்கும். ஆதலினால் உலக மக்களே அரங்கமகானை குருவாய் ஏற்று அடிபணிந்து அரங்கரை பின் தொடருங்கள். அரங்கரின் பின் செல்ல வாரீர் வாரீர் என முருகப்பெருமான் யானும் உங்களை வரவேற்று வாழ்த்தி அருள்கிறேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–

## “ஓம் சரவணஜோதியே நமோ நம”

உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து காலை மாலை பத்து நிமிடம் இந்த மகாமந்திரத்தை சொன்னால் வாழ்க்கையில் பல முன்னேற்றங்கள் உண்டாகும், ஞானமும் சித்திக்கும்.

முருகப்பெருமான் துணை

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்





ஓங்காரக்குடில், துறையூர்,
திருச்சி மாவட்டம்.
போன்: 04327–255184,
www.agathiar.in

----------

நிறுவனர்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,
தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் அவர்கள்
வருகிறான் முருகன்... உலக மக்களை ஆட்சி செய்ய..!

## கறி சாப்பிடாதே! பாவியாகாதே!!

## “முருகா” என்றால் கறி சாப்பிடும் பழக்கம் விட்டுப்போகும்.

## பக்திக்கும் முக்திக்கும் தலைவன் முருகனே!

முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தி எண்ணாயிரம் ரிஷிமார்களுக்கும், ஒன்பது கோடி ஞானிகளுக்கும், அட்டதிக்கு பாலகர்களுக்கும், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் எனும் மும்மூர்த்திகளுக்கும் மேலானவனும், அழைத்தால் அக்கணமே வந்து அருள் செய்யும் ஆற்றல் பொருந்திய முருகப்பெருமான் திருவடிகளை போற்றுவோம்.

தவறு செய்து விட்டோமே என்ற கவலை வேண்டாம். ஒருமுறை “முருகா” என்றால் அத்தனை தவறுகளும் மன்னிக்கப்படும்.

## தமிழுக்கு தலைவன் முருகனே!

**ஞானத்திருவடி மாத இதழ்**
உங்கள் இல்லம் தேடிவர சந்தா செலுத்துங்கள்
செல் – 96591 33377.

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

# அன்னை மருத்துவமனை,
# துறையூர்.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## மார்கழி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, மார்கழி மாதம் 14ஆம் தேதி,**
**29.12.2020 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## தைப்பூச விழா மற்றும் பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, தை மாதம் 15ஆம் தேதி,**
**28.01.2021 - வியாழக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | பிரசன்னக்குமார், மணப்பாறை | 74022 72216 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |
| 18. | மலர்க்கொடி, வேலூர் | 99521 15654 |

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

# ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை, DD - வரைவோலை, MO - பணவிடை

**GOOGLE PAY**

Mobile No - 90956 33344.
UPI CODE - kudilbooks@okicici

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

பணம் அனுப்பியவுடன் 90956 33344 என்ற செல் எண்ணிற்கு தகவல் தெரிவக்கவும்.

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

## நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :
96882 78666, trustkudil@gmail.com

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.


# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

# "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

பளகிலாது ஓங்கும் பளிக்குமா மலையே
வளம்எலாம் நிறைந்த மாணிக்க மலையே
மதியுற விளங்கும் மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே
உரைமனம் கடந்தாங்கு ஓங்குபொன் மலையே
துரியமேல் வெளியில் ஜோதிமா மலையே
புற்புதம் திரைநுரை புரைமுதல் இலதோர்
அற்புதக் கடலே அமுதத்தண் கடலே
இருட்கலை தவிர்த்தொளி எல்லாம் வழங்கிய
அருட்பெருங் கடலே ஆனந்தக் கடலே 1390

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/–     ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ______________________________

முகவரி : ______________________________

______________________________

ஊர் : ____________________ பின்கோடு __________

வட்டம் : ____________________ மாவட்டம் __________

தொலைபேசி : ______________ (கைபேசி) ______________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை     ☐ DD வரைவோலை     ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்